திராவிடநாடு

23–12–62 | வார வெளியீடு | விலை 16 காசு

தூய பணி

——கவிஞர் சுரா——

நரபலிக்கே ஆடுகின்ற வீணர் தம்மை
நசுக்கும் வரை நாடிடுவோம் தூயபணி!

அறமுரைக்கத் துணிந்திடுவோம்! நாட்டில் தீமை
பொசுங்கும் வரை பாடிடுவோம் போர்ப்பரணி! சீன

அரவெழுந்த திருநாட்டின் எல்லையிலே அது
அடங்கியதென நம்பிடாமல், நடத்திடுவோம் வீரர் அணி!!

திரண்டு மீண்டுமது தாக்குகின்ற திட்டமெலாம்
திடமுடனே தூளாக்கத் திரண்டிடுவோம் முன்னணியில்!

இயற்கை வென்றது

[நாகமாணிக்கம்]

'கன்னல்' இதழ் தோன்றி நான்காண்டுகள் உருண்டுவிட்டன; ஆண்டுகள் நான்கு மாண்டொழிந்து போனது, மின்னல் தோன்றி மறைவதுபோல வாசகர்களுக்குத் தோன்றியது. இலக்கியத் திங்கள் இதழ் என்று பெயர் வைத்துக்கொண்டு, இலக்கியத்தைக் கலக்கிச் சகதியாக்கும் ஏடுகளுக்கு இடையே, பட்ட கருத்துக் களை வெட்டு ஒன்று துண்டு இரண்டு எனப் பிட்டு வைத்திடும் கட்டுப்பாடு உடைய ஏடாக அது விளங்கியது. அரசியல் கட்சிகளின் சார்பில் செல்லாது, "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றுதல்" போலக் கூற்றுவனாகவும்; "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்திடும்" உயர்வு மிக்க கருத்துக் கதைகளை—சிரிக்கும் சிறு கதைகளை—வடித்து நல்குவதில் வனப்புப் பெற்றும்; வளம் கொண்டும்; முக்காலமும் வாழ்ந்திடும் நல்ல வளம் பெற்ற தத்துவக் கட்டுரைகளைத் தந்தும்; தன் கடமையினை நீதி வழியே, கால்வேக்காடு, அரைவேக்காடுகளைப்பொருட்படுத்தாது; இருட்டறையில் உழலும் குருட்டு மனிதர்களையும்; திருட்டு வழியில் செல்லும் புரட்டு நெஞ்சங்களையும் திருத்தும் நல்வழி காட்டியாக விளங்கி வந்தது. அந்த இதழின் எழுத்தாளர்தான் 'அடலேறு'.

'கன்னல்' இதழின் தோற்றுவாயிலிருந்து, அது ஏற்றம் பெற்று, அரியணையில் வீற்றிருக்கும் இன்று வரை, சிறுகதை எழுத்து வேந்தர்களில் 'அடலேறு'ம் ஒருவர். கதை மன்னர்—அடலேறுக்காகவே இடைவிடாது இதழ் வாங்கிச் சுவை காண்போர் ஏராளம்! அவ்விதழ் ஐந்தாம் படியில் ஏறிய வேளை, அவரின் எழுத்தோவியம் இடம் பெருது போயிற்று. ஆசிரியருக்கு ஏராளமான மடல்கள்; கடல் அலைகள் மேல் எழுவது போல, மோதின; 'அடலேறுவின் எழுத்தோவியம் எங்கே?' என மடல்களைப் படித்த பின்னர்தான், கன்னலாசிரியர் 'செந்நெல்'லுக்கே அடலேறின் எழுத்தோவியம் இடம் பெருதது தெரியலாயிற்று.

உளம் துடித்த செந்நெல், அடலேறின் இல்லம் நோக்கினுர்; திரும்பி வருகையில் "திருமண அழைப்பு" பெற்றுவந்தார் இதழில் வெளியிட!

"மண விழா அழைப்பு"
அனைவரும் வந்து ஆசிதருக.
—அடலேறு.

(குறிப்பு:— எனது மண முயற்சியின் காரணமாக—வாழ்வுத் துணை தேடும் படலத்தால்-சென்ற இதழ்க் கன்னலில் எழுத்தோவியம் இடம் பெற இயலாது போயிற்று. 'கன்னல்,' சுவை குன்றிவிடுமோ என அஞ்சி மடல் தீட்டியுள்ள வாசக அன்பர்களே! தருகின்றேன் அடுத்த இதழில்—அடலேறு.)

இந்த அழைப்பிதழோடு அடுத்த இதழ் வெளியாயிற்று. சீரும் சிறப்பும் மிக்க கன்னலில், அடலேறின் எழுத்தோவியம் இல்லாது போனது, நகையிழந்த நங்கையை நினைவூட்டி நின்றது.

*

மணநாள் முடிந்தது. குணவதியைக் கொண்டவர்; கொள்கைவழி நிற்பவர்; வள்ளுவரின் தெள்ளு தமிழ் இன்பப்பாலை அள்ளிப் பருகுங்கள் என வாசக அன்பர்கள் அனைவர்க்கும் அளித்தவர்; 'இன்னும் இதழுக்குச் சுவைதரா நிற்றல் நன்றோ?' என அன்பர்களின் வினுக்கணைகள் ஆசிரியர் செந்நெல்லைத் துளைத்தன. திங்கள் ஆறு கழிந்தது. ஏழாவது திங்கள்; இதழ் வெளி வந்தது. அட்டையே புதுமை; அமுதம்போல் சிறப்புடன் நின்றது. ஓவிய மன்னர் 'ஆதவன்' தீட்டியிருந்தார், இதோ!

இரண்டு பேர் — ஆணும், பெண்ணும் — அமர்ந்திருக்கின்றனர்; அமர்ந்திருக்கும் இடம் — கிளைகள் நிறைந்து, பழங்கள் தொங்கும் மரத்தினடி; மரத்தைச்சுற்றிக், கொடியொன்று படர்ந்துள்ளது. மரத்தின் ஒரு கிளையில் இரண்டு கிளிகள் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கின்றன. ஆணும், பெண்ணும் — வன்மையும், மென்மையும்—எதிரெதிரே அமர்ந்திருக்கின்றனர். இருவருக்குமிடையே, "குறளின்பம்" என்னும் ஏடு வைக்கப்பட்டுள்ளது. அந்த ஏட்டை எடுத்துக் கொள்வதிலே இருவருக்கும் போர் நடக்கின்றது. 'போரிலே யார் வெல்வார்?' என்று இருவரும் அவர்களாகக் கேட்டுக் கொண்டு, 'வெற்றி எனக்குத்தான்' எனப் பெருமிதமும் கொள்கின்றனர். இக்காட்சியை — எழில்மிகு காட்சியை-'குறளின்பம்' பெற்றிடும் போர் நிகழ்ச்சியை—மரக் கிளையின் இடையே ஏற்படும் ஒளியின் வழியே ஓர் உருவம் பார்த்துச் சிரித்துக் கொள்கின்றது; வாழ்த்துக் கூறி நிற்கின்றது. அந்த உருவத்தின்மீது 'வள்ளுவர்' எனஎழுதப்பட்டுள்ளது. பழக்குலை யொன்றின்மீது, '1284' என்னும் எண் எழுதப்பட்டுள்ளது.

இதுதான் ஆதவன் வடித்திருக்கும் காட்சி, இதழ்களைப் பிரித்தேன். ஓர் இதழில்—

O

சாளரத்தின் வழியே கதிரவன் தன் பொற்கிரணங்களைப் பாய்ச்சிக் கொண்டிருந்தான். மாலை, மணி ஐந்து. ஐந்துமணிவரை உறக்க மங்கைஎன்னோடு உறவுகொண்டது எனது வாழ்விலே முதல் முறை! மிக வேகமாக எழுந்து, கீழே சென்று, முகம் கழுவிக்கொண்டு, மீண்டும் அறைக்குத் திரும்பினேன்; நாற்காலியில் அமர்ந்தேன்; மேசை மீது தாள்கள் கிடந்தன; எழுது கோலும் கிடந்தது.

கன்னலின் நினைவு; வாசக அன்பர்களின் வேண்டுகோள்; செந்நெல்லின் முகம்; சென்ற சில மாதங்கள்; அம்மாதங்களின்.........நினைவுகள்; என் மனக்கண் முன்னே தோன்றி மறைந்தன. எழுதுகோல் என் கரத்தில் ஏறியது. எழுத்துக்கள்தான்

(4-ம் பக்கம் பார்க்க)

உலுத்தனை விரட்டுவோம்!

...ர் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (23—12—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 17

உழைப்பை அதிகப்படுத்தி ஊதியத்தைப் பெருக்கி

உயுத்த நிதிக்கு உதவுங்கள்

★

வேலையின்றி வீட்டிலிருப்போர் உண்டியைச் சுருக்கி

சண்டைக்கு உதவுங்கள்

★

உங்கள் கையில் கிடைக்கின்ற எதனையும்

படைக்கு உதவுங்கள்

★

கஞ்சியைக் குடித்தேனும்

வெஞ்சமருக்கு உதவுங்கள்

★

வஞ்சகச் சீனன் அஞ்சி ஓடும்வரை பஞ்சையும் உறங்கான் என்பதை உணர்த்தி

உறுதியுடன் போருதவி செய்யுங்கள்

★

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உலுத்தனை
கள்ளமற்ற வெள்ளை உள்ளத்தினர்

விரட்டியே தீருவர்

என்ற உறுதியோடு பணிபுரிவோமாக!

★

இறுதி வெற்றி நமதே

2-ம் பக்கத் தொடர்ச்சி

தாள்மீது படியவில்லை; சிரசில் கரங்கொண்டு தேய்த்து, சிந்தனையை அழைத்தேன். முந்திக்கொண்டு வந்து' உடன் குந்தி உறவாட அவ்வளவு மலிவா சிந்தனை? ஊடல் காட்டிக் கொண்டிருந்தது. மாடிப் படிகளில் ஏதோ பாடலொன்றை முணுமுணுத்தபடி, அவள் — எனது இதயராணி — எனதில்லத்தரசி — வெல்லச் சுவையாள் — மெல்லச் சிரித்துக்கொல்லும் முல்லைப் பல்லாள்—இடையில்லையோ எனச் சொல்ல வந்தாள்; கையிற் சுவை நீருடன் வந்தவள் அதனைத் தந்து அவண் நின்றாள்; உயிர்ச் சிலையோ என்னும் தோற்றம் கொண்டு.

'அன்பரசி!'—என்றேன்.

'அத்தான்'-முத்து நகைபிறந்தது; உலகத்துச் சொத்தெல்லாம் என் சொத்தானதுபோலச் சித்தப் பிரமை எனக்கு. 'இன்பமே நீ குடிக்கவில்லையா? குடித்திருக்க மாட்டாய்! முறையுணர்ந்து நடந்திடும்முத்தமிழ் நாட்டின் கொத்து மலர்க் குழலே! நீ கொஞ்சம் — நான் கொஞ்சம் — குடிப்போம், என்றேன்; வஞ்சிக் கொடியவள்அஞ்சனம் தீட்டி, ஆடும் குழல்மேகமென மென்தென்றல் வீசிட நின்றாள். சிறிது நேரம் சிலையானோம். உணர்வு பெற்று, ஓசைபடாது சுவை நீரை அருந்தினோம். காரிகை, காதற்கனி — சென்றாள். சிந்தனை சினங்கொண்டு, ஓடிவிட்டது; அதனை அழைத்திட வேண்டுமே?

○

எண்ணச் சுழலில் சிக்கி, ஏதும் எழுதிட இயலாது, தயங்கி நின்றேன். "மணியோசை முன்னே"... என்னும் கதையொன்று தீட்டலாமே எனத் தலைப்புத் தந்த பின்னர் கருவைத் தேடினேன். மணியோசை முன்னேபோல வளையோசைஒலிக்க, அன்பரசி படியேறிவரும் ஓசை கேட்டேன்; மேசைமீது தலைக்காதர வாய்த் தாங்கி நின்ற முழங்கை அசையத் திரும்பினேன்.

வந்த அன்பரசி நின்றாள்; 'மணி'... என்று கூறி நின்றாள்; எனக்கு விளங்கவில்லை. சிறிதுநேரம் சென்ற பின்னர், அமைதியைக் கிழித்து, 'நிழற்படம் காணச் சொல்வோம் என்றீர்களே!' என்றாள்.

'மன்னிக்கவும்! மறந்துவிட்டேன். 'உதடும் உள்ளமும்' படத்திற்குச் செல்வோம் என்று செப்பினேன் இல்லையா? இதோ! புறப்பட்டேன்!' என எழுந்தேன்; சென்றோம்.

அன்றைய நாள் அப்படியொழிந்தது.

○

மறுநாள்; எதிர்பாராத வேலைகள் பல, அனைத்தும் முடித்து, எப்படியும் கன்னல் இதழுக்கு இத்திங்களிதழில் வெளிட—ஒரு கதை அனுப்பிவிடவேண்டும் என்னும் மன உறுதியுடன் அமர்ந்தேன்; மாலை வேளை!

பழுதிலா நெஞ்சங்கொண்டு சிந்தனை அடிக்கடி வந்து; அருகமர்ந்து; விருந்து படைத்து; வேல்விழி தந்து; கார்மேகம் அன்ன தார்குழல் காற்றில் அசைந்திட; நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே எனக்கூறிய நக்கீரனை என்முன்னே நிறுத்திடச் செய்யும் அன்பரசியை எண்ணியபடி, எழுதுகோல் தொட்டேன். தொட்டாலும் கை மணக்கும்,—சொன்னாலும் வாய் இனிக்கும்,—கேட்டாலும் செவி நுகரும், மாடிப்படியேறி வரும் ஓசையும், சுவைநீரின் மணமும் அறிந்தேன். இருவரும் பருகினோம்.' என்றன் கதையும் நின்றது — கன்னலும் மறைந்தது — எங்கள் கதையும் தொடர்ந்தது. கோபம் ஓர்புறம் தோன்றும்; மங்கையின் கொவ்வைச் செவ்வாய் அதை நீக்கும்; அன்புத் தமிழமுதூட்டி, இன்பம் காட்டி, உணர்வு மூட்டி, சிறையில் பூட்டி, உறவில் மகிழ்ந்திடும் காட்சி முடியும்; உலகம்தெரியும்; இப்படியே அன்றைய மாலை மயங்கியது; இரவு தொடர்ந்தது.

○

இரவு உணவைமுடித்துக், கன்னல் நினைவோடு—உறுதி உள்ளத்தோடு —சிறிதும் தளர்விலாது — மாடி சென்றேன்; அமர்ந்தேன். இன்ப நிலா விண்ணில் பவனிவரத் தொடங்கியது. மண்ணில் பலரைக்காய்ந்து, சிலரைச் சேர்ந்து மகிழ்ந்தது. சாளரத்தின் வழியே — ஊர் உறங்கிய வேளையிலே—உறவாடவந்த நிலவை எண்ணி, உதயமாகும் கருவை (கதையை) உலகுக்கீதல் வேண்டும் என்னும் உறுதியால் எழுதுகோலை எடுத்தேன். என் முதுகின்மீது நிலவின் விளையாட்டு; நிலவொளிக்கு உடலைத் தடவி, உணர்வூட்டும் ஆற்றலும் உண்டுகொல்லெனத் திரும்பினேன். என் மனைவி நின்று கொண்டிருந்தாள்; சினத்தேவி என்னை நெருங்கினள்; மனைத்தேவி வென்றாள்.

'ஏனிங்கு வந்தாய்' என்றேன். கனலைக் கண்களில் கண்டவள், கெண்டைவிழிகள் சுழல, 'மணி பத்தத்தான்...உடம்பு...உறக்கம்' என ஏதோ சொன்னாள்.

'செல்வமே! சென்று தூங்கு! எனக்குத் தூக்கம் வரவில்லை. அதோடு, இன்று கதையையும் முடித்திடல்வேண்டும்' என்றேன்.

'எனக்குத் தூக்கம் வரவில்லை கீழே தனிமையாகவும் இருக்க வேண்டும் அச்சமாகவும்........" அவள்.

"தனிமையிலே இனிமை வேண்டும்; உரிமையிலே உறவுவேண்டும்; பொறுமையிலே பெருமைவேண்டும்; 'வள்ளுவன் வாழ்வை'யோ 'அவ்வை தந்த அமுதத்'தையோ அருந்திக்கொண்டிரு" எனக் கூறினேன். வேதனைபோலும்! விழிகளிலே மாற்றம் தோன்றிடச் சென்றாள். என்மனமோ அமைதியை இழந்தது. 'அதட்டி விரட்டிவிட்டேனோ?' என என்னை நானே பல முறை கேட்டுக்கொண்டேன். எனது இதயம் வருந்தியது; சொல்லிலே ஏன் இவ்வளவு கடுமையினை வடித்தேனோ அறியேன். நேரம் சிறிது சென்றது.

'அத்தான்'-வந்துவிட்டாள் வண்ணக்கிளி; கத்தும் குயிலின் குரலாள். என் சினம் தணிந்திருக்கும்; மனம் குளிர்ந்திருக்கும்; இக்குணம் அவளுக்குத் தெரிந்திருக்கும்; அதில் வியப்பில்லைதான்.

'அன்பரசி!' ஆத்திரமிருப்பது போலவே அழைத்தேன்.

'களவும் கற்று மற' என்னும் முத்தமிழ் வரியின் பொருளென்னத்தான்.

"அன்பரசி! 'களவும் கற்று மற' என்று கூறப்பட்டுள்ள முதுமொழிக்கு விளக்கம்—எனது,விளக்கம்—தருகின்றேன். இதுதான் சரி என்றோ—இதுதான் அதற்குத் தகவாய் பொருளென்றோ கூறவேண்டாம். இப்படித்தான் அது—இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று எனது சிந்தை தரும் இந்தக் கருத்தைக் கொண்டால் கொள்க; விட்டால் விடுக. நீ எண்ணுவது போல அகப்பொருள், அதிலே வருகின்றதே! களவு — அது அல்ல.

(13-ம் பக்கம் பார்க்க)

கம்யூனிசம் சரிகிறது

ஏறத்தாழ—கடந்த—மூன்று திங்களாக இந்தத் துணைக் கண்டத்து நல்லறிவாளர்கள் அவ்வளவு பேரின் எண்ணமும், சிந்தனையும் ஒரே ஒரு செய்தியில்தான் ஆழப்பதிந்து கிடக்கின்றன. உள்ளும், புறமும் ஒரே பாங்குள்ள அவ்வளவு பேரும், உண்மையான நாட்டுப் பற்றினையுடைய அவ்வளவு பேரும் இன்று இந்தத் துணைக்கண்டத்து மண்ணுக்குச் சீனக்கம்யூனிஸ்டுவெறியர்களால் ஏற்பட்டுள்ள பேரின்னலைப் பற்றியே நினைப்போராக இருக்கின்றார்கள், பேசுவோராக இருக்கின்றார்கள், அந்தப் பேரின்னலைப் போக்குவதற்கான வழி வகைகளைக் காண்போராக, அவ்வழி செயல்படுவோராகவே இருக்கிறார்கள். இந்த இக்கட்டான கட்டத்தில்—நல்ல மனச்சான்றும்; உள்ளும், புறமும் ஒரே போக்கும், உயரிய நாட்டுப் பற்றும் கொண்டியங்கும் மிகப் பெரும்பாலோர்க்கிடையே ஒரு சிலர் தங்களுடைய துரோகச் செயலை, ஐந்தாம் படை வேலையை அமைதி நாட்களில் செய்து காட்டியதைவிடப் பன்மடங்கு வேகமாகத் தீவிரமாகத், துணிச்சலாக நடத்திக் காட்டுவதைப் பார்க்கும்போது நல்லோரின் உள்ளங்கள் எல்லாம் ஒருபுறம் நடுக்கம் எய்துகின்றன, மறுபுறம் வேதனைப்படுகின்றன.

நடுக்கம்:

எங்கே இந்த ஐந்தாம் படைகளின் திட்டமிட்ட செயல் முறைகள் வெற்றி பெற்றுவிடுமோ, எங்கே அந்த ஐந்தாம் படையின் வெற்றி வடக்கெல்லையில் சில நகரங்களைப் பிடித்துக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்டு வெறியர்களிடம் இந்தத் துணைக் கண்டம் முழுதையும் இப்படியே ஒப்படைத்துவிடுமோ என்பதற்காக.

வேதனை:

நாட்டுப் பற்றும் நல்லறிவும், மனச்சான்றும் நிறைந்துள்ள இந்தத் துணைக் கண்டத்து மக்களிடையே இப்படியொரு துரோகக் கும்பலும் உலவுகிறதே என்பதற்காக.

தன்னுடைய நாட்டை யார் பிடித்துக் கொண்டாலும் சரி, அது யார் வசப்பட்டாலும் சரி, அங்கே செங்கொடிக்கு மட்டும் மதிப்பளிக்கப் பட்டு, அது ஒன்றே பறக்கவிடப் படும் ஒரு சூழ்நிலை—வேறு எந்தக் கொடியும் கண்ணிலே படமுடியாததொரு சூழ்நிலை—ஏற்பட்டுவிட்டால் போதும் என்று எண்ணுகின்ற மனித விலங்குகள், இயந்திர உருவங்கள் இங்கே உலவுகின்றனவே என்பதற்காகவும் அந்த வேதனை.

மக்களின் நல்வாழ்வுக்காக, நல்ல நோக்கத்தோடு இங்கே நடத்தப்படுகின்ற நாளேடு கிழமையேடுகள் அவ்வளவும் இந்தத் துணைக் கண்டத்தில் வந்து கவிந்துள்ள போர் என்னும் பேரின்னலைப்பற்றிய செய்திகளை வெளியிட்டுக்கொண்டு வருகின்றன. அந்தப் பேரின்னல் ஒழிக்கப்படுவதற்கான வழி வகைகளை ஆராய்ந்து அவனிக்கறிவித்துக் கொண்டிருக்கும் நல்ல தொண்டினைச் செய்து வருகின்றன. ஆனால்

கனகு

சில ஏடுகளோ இந்த இக்கட்டான வேளையில் எந்தெந்த வகையில் நாட்டிலே குழப்பத்தை உண்டாக்கலாம் என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றன. அவ்வாராய்ச்சி வழி செயல்படுகின்றன.

எங்கே சிந்தனைக்கு வேலி இல்லையோ, எங்கே சிந்தனை தன் சிறகடித்து எல்லையில்லாப் பரப்பு மட்டும் பறந்து செல்லும் தன்மையினைப் பெற்றுள்ளதோ, உரிமையினைப்பெற்றுள்ளதோ, அங்கிருந்துதான் மனச்சான்று என்பது வெளிப்பட முடியும். அங்கிருந்துதான் உள்ளதை உள்ளவாறு காட்டும் ஒளிவு மறைவு இல்லாமல் காட்டும், ஐயம் திரிபுக்கு இடமில்லாமல் காட்டும் உண்மை என்பது வெளிப்பட முடியும். அங்குதான் நேர்மையைக் காணமுடியும். அங்குதான் உண்மையான மனவிரக்கத்தைக் காண முடியும். அங்குதான் மெய்யன்பைக் காணமுடியும். அங்குதான் நல்லிதயம் எவ்வாறு செயல்படும் என்பதைக் கண்கூடாகக் கண்டு கொள்ளமுடியும். மாறுகச் சிந்தனைக்கு வேலிபோடப்பட்டிருக்கும் ஒரு சூழலில் உள்ளதை உள்ளவாறு கண்டறிவது முடியாத ஒன்று. அங்கிருந்து வெளிப்பட்டுப் புறத்தோற்றம் காட்டிக்கொண்டிருப்பதற்கும், உண்மை நிலைமைக்கும் வேறுபாடு இல்லாமற்போவதற்கு இடமில்லை.

இப்படிச் சொல்லுவது ஒன்றும், எண்ணுவது ஒன்றுமாகச் செயல்பட்டுத் திரிவோர்தாம் அந்த ஒரு சிலர். குடியாட்சி நெறிக்கு முழுக்க முழுக்க முரண்பட்ட தன்மையுடையது கம்யூனிசம் என்பதோடு, உலகில் சர்வாதிகாரத் தன்மையில், செயலில், வெறியில் ஈடு இணையற்றவை எனப்படும் பாசிச, நாசிசக் கொள்கை கோட்பாடுகள் கொடுமை குறைந்தவை என்று கூறும் அளவுக்கு மிகக்கொடிய தன்மை வாய்ந்தது கம்யூனிசம் எனப்படும் சர்வாதிகாரக் கோட்பாடு. இது உலகறிந்த உண்மை. இந்தக் கம்யூனிசக் கோட்பாட்டுக்கு அடிபணிந்து போனவர்கள் எந்தக் காலத்திலும் எண்ணியதையே சொன்னது கிடையாது. சொன்னதையே எண்ணியதும் கிடையாது. கம்யூனிஸ்டுகளின் இந்த எண்ணத்துக்கும் செயலுக்கும் முரண்பட்ட தன்மையினை எடுத்துக்காட்டத் தமிழகம் முதற்கொண்டு உலகு எங்கணும் சிறப்பான சான்றுகள் ஒன்றல்ல, இரண்டல்ல; பல உள்ளன. இதை மனத்தில் வைத்துக்கொண்டுதான் அண்மையில் இந்திய உள்நாட்டமைச்சர் கம்யூனிஸ்டுகளைப் பார்த்துக் கூறினார்: "நீங்கள் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தீர்மானம் போட்டிருப்பதாகக் கூறுகிறீர்கள். அந்தத் தீர்மானத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கப் போவதாகவும் சொல்கிறீர்கள். நீங்கள் அப்படிச் சொல்லும்போது மனப்பூர்வமாகத்தான் சொல்கிறீர்களா என்பதை உங்கள் மனத்தைத் தொட்டுச் சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று.

ஒருகாலமிருந்தது. 'கம்யூனிசம் எனப்படும் மாயவிளக்கு எங்கே ஏற்றப்பட்டு, ஒளி உமிழச்செய்யப் பெறுகிறதோ, எப்போது ஏற்றப் பட்டு சுடர்விரியச் செய்யப்படு கிறதோ, அங்குதான் மன்பதை அனைத்துக்கும் ஏற்றம் என்று இல் லாமல் சமநல உயர்வாழ்வு முகிழ்த்து விளங்குவதைக் காண முடியும். அப்போதுதான் இன்ப மென்ற ஒன்றைத்தவிர வேறியாதை யுமே காணல் முடியாது என்றொரு நிலையினை அனைத்து மக்களும் எய்தமுடியும்' என்று கம்யூனிசப் பூசாரிகள் எங்கெங்கும் ஓங்கிக் குரல் எடுத்து முழங்கித் திரிந்ததைப் பாமரப் பாட்டாளியர் நம்பியிருந்த காலம். "ஆமாம், அவர்கள் சொல் வது உண்மையாகத்தான் இருக்க வேண்டும். அந்தக் கம்யூனிசம் எனப்படும் மாய விளக்குக்கு எல்லா இடத்தையும் இன்ப உலகமாக்கும் ஆற்றல் இருக்கத்தான் வேண்டும். எல்லாரையும் இன்பத் துய்ப்பாளர் களாக மாற்றும் ஆற்றல் இருக்கத் தான் வேண்டும்'' என்று எண்ணி அந்தப் பாமரப் பாட்டாளியர் எதிர் பார்த்திருந்த காலம்.

ஆனல் இன்று! அந்த நிலை மாறிக் கொண்டு வந்துவிட்டது. ஆண்ட வன் பெயரைச் சொல்லி வெவ்வேறு மதத்தின் பெயரால் மதப் பிரசாரகர் கள் எப்படி இடைவிடாது பிரசாரம் செய்துகொண்டு திரிகிறார்களோ, அதற்காக எப்படிப் பொன்னையும் பொருளையும் வாரி இறைக்கின்றார் களோ, எப்படி வெவ்வேறு வகைச் சலுகைகளைக் காட்டி மக்களைத் தங்கள்பால் கவர்ந்திழுத்துக்கொள் ளும் செயலில் தீவிரமாக முனைந்து நிற்கிறார்களோ, அப்படி அல்ல;— அதையும் பலபடி மிஞ்சி இந்தச் சீனக் கம்யூனிசப் பூசாரிகள் கடந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி தங்கள் கம்யூனிசப் பிரசாரத்தை இடைவிடாது முடுக்கிவிட்டுக் கொண்டேதான், திரிந்து வருகிறார் கள். இந்தக் கம்யூனிஸ்டுகள் எண் ணியவாறே ஒரு சமயம் அந்த மாயக் கொள்கை ஏற்றம் பெறவும்தான் செய்தது. ஆனல் பொய்ம்மைப் பிரசாரத்தில் அடைந்துவிட்ட ஏற் றம் எவ்வளவு காலம் தலைதூக்கிக் கொண்டு நிற்கும்? ஏறிய வேகத் தினும் மிக விரைந்து இந்தக் கம்யூ னிசக் கோட்பாடு இப்போது உலகு எங்கணும் சரிந்துகொண்டு வருகி றது. அன்று உலகப் பாட்டாளியர் இந்தக் கம்யூனிட்டுகளின் மாய வாதத்தைக் கற்பனைக் கண் கொண்டு பார்த்தார்கள். அப்போது ஒவ்வொன்றும் இன்பம் நிறைந்த தாகவே அந்தக் கற்பனைக் காட்சி யில் வந்து தோற்றங் காட்டிவிட்டுச் சென்றது. இன்று அந்தப் பாட் டாளியர் எல்லாவற்றையும் கண் கூடாகப் பார்க்கும் நிலைக்கு வந்து விட்டார்கள். கற்பனையில் கண்ட வற்றுக்கும், இப்போது கண்ணெ திரே நிகழ்ந்துகொண்டிருக்கின்ற வற்றுக்குமிடையே உன்னிப் பார்க்க வும் முடியாத வகையில் வேறுபாடு கள் தெரிகின்றன. இந்த விபரீத மான வேறுபாடு கம்யூனிசம் எனப் படும் மாயக் கொள்கைக்குச் சாவு வீடு கட்ட முனைந்துவிட்டது. பாமரப் பாட்டாளியருள் மிகப்பெரும் பாலோர் தாங்கள் கம்யூனிசப் பூசாரியரால் இவ்வளவு நாள் ஏமாற் றப்பட்டு வந்ததை உணர்ந்து கொண்டுவிட்டார்கள். விழிப் படைந்துகொண்டுவிட்டார்கள். கம்யூனிசத்துக்கு முழுக்குப்போட்டு விட்டார்கள்.

சீன, மக்கள் சீன என்று கம்யூ னிஸ்டுகளால் அழைக்கப்படத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் "இன்னும் சில நாளில் பார், மக்கள் சீனவென்னும் பொதுவுடைமை நவ சீனத்தில் பாலும் தேனும் பெருகி வழிந்தோடப்போகிறது!'' என்றார் கள். அவர்கள் முரசறைந்ததைப் பார்த்தபோது 'ஏதேது கம்யூனிசம் தான் உலகத்திலேயே சிறப்பான தொரு கோட்பாடு போலும்' என்று மனச்சான்று உள்ளவர்கள்கூட எண்ணும் அளவுக்கு இறங்கி வந் திருந்தார்கள். 'நாட்டுக்கு வேண்டு வது வளம். நாட்டு மக்களுக்கு வேண்டுவது நல்வாழ்வு. அது கம்யூ னிசத்தின் மூலம்தான் வரமுடியும் என்றால் வரட்டுமே அதன் மூலம்.' என்றுகூட முடிவுசெய்து எதிர் பார்க்க முனைந்துவிட்டார்கள். 'இனி அரசுக் கட்டில் இந்த நல்வாழ்வுமுரசு கொட்டும் கம்யூனிஸ்டுகளுக்குத் தான்' என்று உறுதியாக நினைத்தே கூட விட்டார்கள். இப்படி நல்லவர் களும் நினைக்க, எதிர்பார்க்க, முடிவு கட்ட அனுசரணையாக இருக்கும் வகையில் அப்போது சீனத்திலிருந் தும் செய்திகள் வந்தன. "பாரீர் உலகீரே, வெறும் சீனவாக இருந்த எங்கள் நாடு மக்கள் சீனவாகி மூன்று வருடங்கள்கூட முடிய வில்லை. அதற்குள் நாங்கள் பஞ்சத் தால் அடிபடும் நாடு எங்கள் நாடு, பட்டினியால் அவதியுறும் நாடு எங் கள் நாடு' என்ற மாசுகளை அறவே துடைத்தெறிந்துவிட்டோம்! அதோடுமட்டுமா! உணவுப் பற்றுக் குறையால் மற்ற நாடுகள் இன்னல் பட்டுக் கொண்டிருக்குமானல் எங் கள் நாட்டிலிருந்து அவர்களுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பவும் நாங்கள் சித்தமாக இருக்கிறோம்!'' என்று அவர்கள் பெருங்குரல் எடுத் துக் கூறி நின்றார்கள். இவற்றை யெல்லாம் பார்த்தபோது எவ்வளவு பேர் திகைப்படைந்து போனர்கள்!

பொய்ம்மை கொண்டு எவ்வளவு நாள் உலகத்தை ஏமாற்றிக் கொண்டு திரியமுடியும்? உண் மையை எவ்வளவு நாள் மூடி மறைக்கமுடியும்? நாலைந்து ஆண்டு கள்கடப்பதற்குள்பொதுவுடைமைப் பூங்காவாகி, உலகுக்கே உய்வளிக் கும் புதுமை நிலமாக மாறிக் கொண்டுவந்துவிட்டதாகக் கூறப் பட்ட புதிய மக்கள் சீனவில் உண வுப் பஞ்சம் தலைவிரித்தாடுகின்ற செய்தி உலகுக்கெல்லாம் எட்டி யது. அந்தப் பொதுவுடைமைப் பூங் காவில் பட்டினிச் சாவுகள் ஏற்படத் தொடங்கின. அங்குள்ள மக்கள் உணவுப் பஞ்சத்தால் பேரல்லலுக் காளாகிச் செத்து மடிவதைவிட அங்கிருந்து வெளியேறிவிடுவது மேல் என்று எண்ணினர்கள்! அப் படி வெளியேறும் முயற்சியில் எல் லைப்புறத்திலுள்ள கம்யூனிஸ்டுக் காவற்காரர்களின் பயங்கர வெடி குண்டுகளுக்கு இரையாகிச் செத் தொழிந்தாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். அடுத்திருந்த ஆங்காங்கின் மக்கள் தொகை நிமி டத்துக்கு நிமிடம் பெருவளர்ச்சி பெற்றுக்கொண்டு வந்தது. இனி ஆங்காங்கால் தாக்குப்பிடிக்க முடி யாது என்ற நிலைமை வந்தது. ஆங் காங்கில் மேலும் சீனர்கள் வந்து குவியாதபடி காவல் போடப்பட்டது. அந்தக் காவலையும் மீறி, உயிருக் குத் துணிந்து, கடலில் குதித்துச் சீனத்துப் பாட்டாளியர் ஆங்காங் வந்து சேரமுயன்றார்களாம்! அந்த முயற்சியில் கடலுக்கு இரையா னேர் பலர். மேலும் மேலும் அந்தப் பொதுவுடைமைப் பூங்காவில் பஞ் சம் வளர்ந்துகொண்டே போயிற்று —போகிறது. மேலும் மேலும் பட் டினிச்சாவுகள் பெருகிக் கொண்டே போயின—போகின்றன. அந்தப் பட்டினிச்சாவுக்கு அஞ்சிச் சீனத்து இளம் பெண்கள் எத்தனையாயிரம் பேர் தங்கள் உடலையே விற்பதற் குச் சித்தமாயினர்; கப்பல் கப்பலாக

அயல்நாடுகள் நோக்கி வெளியேறி னர்! அப்பப்ப. அந்த நிகழ்ச்சிகள் பற்றிய சோகக்கதைகள் ஒன்ரு, இரண்டா! இவ்வளவும் சீனுவில் பூர்சுவா ஆட்சியின் காலத்தில் நடந் தனவல்ல. அந்தப் பூர்சுவா ஆட் சியை ஒழித்துவிட்டு அரசுகட்டில் ஏறிய கம்யூனிஸ்டுகள் கோலோச் சத் தொடங்கி நாலைந்து ஆண்டு கள் முடிந்தபின், அந்தச் சீனு நவ சீனு ஆனபின், அந்தச் சீனு பொது வுடைமைச் சீனு ஆனபின், அந்தச் சீனு மக்கள் சீனு ஆனபின் நடந்தன.

கம்யூனிஸ்டுகள் தங்கள் சர்வாதி கார முறைகள் அவ்வளவையும் கொண்டு, விலங்கு நடவடிக்கைகள் அவ்வளவையும் கொண்டு எவ் வளவுதான் மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருந்தாலும் அந்த நவசீன நாட்டிலே கோர நிர்த்தனம் ஆடத் தொடங்கிய பஞ்சத்தையும், பட்டினி யையும்பற்றிச்சாமானியமக்கள் எப் படிச் சிந்திக்காமலிருக்க முடியும்? மக்கள் தங்கள் உள்ளத்தை வெளிக் காட்டத் தொடங்கினர்!

ஆட்சியிலிருக்கும் சீனக் கம் யூனிஸ்டுகள் என்ன செய்வதென்று தோன்ருமல் தடுமாறினுர்கள். எப் படியாவது தங்கள் கம்யூனிச ஆட்சி யைக் காத்துக்கொள்ளவேண்டும். அதுதான் அப்போதைக்குத் தேவை. கம்யூனிஸ்டுகளைப் பொறுத்த வரையில்தான் எந்த நாட் டிலும் மக்களின் உயிர்களுக்கு மதிப்பில்லையே! கம்யூனிசம் எனப் படும் சர்வாதிகாரக் கோட்டையைக் கட்டுவதற்கு மக்களின் உயிர் பயன் படுத்தப்படும்போது ஒவ்வொரு மனி தனின் உயிரும் அந்தக் கம்யூனிசத் துக்கு முன் ஒரு வெறும் சிற்றணு வாகத்தானே எண்ணப்படுகிறது! அந்தச் சிற்றணு அழிந்து பயன்பட் டாலும் சரி, அழியாமல் பயன்பட் டாலும் சரி எல்லாம் அந்தக் கம் யூனிஸ்டுகளுக்கு ஒன்றுதானே!

எனவே — எப்படியாவது மக்க ளின் எண்ணத்தை அப்போதைக் குத் திசை திருப்பினுல் போதும் என்று எண்ணினுர்கள் சீனப் பொதுவுடைமைப்பூங்காவின் தலைவர் கள் எனப்படும் சுடுகாட்டுச் கண் காணிப்பாளர்கள். இந்தியத் துணைக் கண்டத்தைப்பற்றி இல் லாத பொல்லாத செய்திகளையெல் லாம் மக்கள் மத்தியிலே அவிழ்த்து விட்டார்கள். கம்யூனிச நாடுகளில் தான் எந்த ஒரு செய்திபற்றியும் எதிர்வாதம் செய்ய முடியாதே! எதிர்க் கேள்வி கேட்க முடியாதே! பட்டினித் தவிப்பையும், பஞ்சக் கொடுமையையும் எண்ணி எண் ணித் துயருற்றுக் கிடந்த அப்பாவிச் சீன மக்களை ஆடு மாடுகளை ஓட்டி வருவதுபோல் மந்தை மந்தையாக ஓட்டி வந்து இமயத்தின் எல்லையிற் குவித்தார்கள். தந்திரமான முறை யில், வஞ்சகமான முறையில் இந் தத் துணைக் கண்டத்து எல்லையில் தாக்குதல் நடத்தினுர்கள். எதை யும் அமைதியான முறையிலே நடத்த வேண்டும், சண்டையென்ற பேச்சு எங்குமே இருக்கக்கூடாது! அமைதியான உடன் வாழ்வுக் கொள்கையே சிறந்தது. அணு குண்டு உற்பத்தி அணுகுண்டுச் சோதனை கூடாது கூடாது! எங் குமே கூடாது! என்று அனைத்துல குக்கும் சொல்லிக்கொண்டு வந்த இந்தியாவின்மீது கம்யூனிஸ்டுச் சீனர்கள் தாக்குதல் நடத்தினுர்கள். அமைதி அமைதி என்று சொல்லிக் கொண்டிருந்த காரணத்தால் படைக் கல உற்பத்தியைப்பற்றியே எண்ணு திருந்த ஒரு நாட்டின்மீது கம் யூனிஸ்டுச் சீனர்கள் தாக்குதல்நடத் தினுர்கள்! மண்ணுசையோடுகூட, 'சீன நாட்டில் கம்யூனிசம் வெற்றி பெருமல் சரிந்துகொண்டு வரு கிறது. அதை உலகத்தின் கவனத் திலிருந்து மூடி மறைக்க வேண்டும்' என்ற நோக்கத்தோடும் இந்தக் கம் யூனிசவாதிகள் படையெடுத்து வந் தார்கள்! இந்தக் கம்யூனிஸ்டுகளால் காலனி ஆதிக்கவாதிகள், ஏகாதிபத் தியவாதிகள் என்று கூறப்படுவோர் எண்ணிக்கூடப் பாராத ஒரு வஞ்ச கச்செயலைப்,படுமோசமானசெயலை, அநியாய, அதர்மப் படையெடுப்பை இந்தக் கம்யூனிஸ்டுகள் செய்தார் கள்.

எந்தக் கம்யூனிசத்தின் தோல் வியை, சரிவை உலகுக்குக் காட்டி விடக்கூடாது என்பதற்காக உலகத் தின் கவனத்தையே திசை திருப்பும் நோக்கத்தோடு சீனக் கம்யூனிஸ்டு களும் மற்றவர்களும் திட்டமிட்டு இந்தப் படையெடுப்பை இந்தியா வின்மீது நடத்தினுர்களோ, அவர் களின் இந்த நோக்கம் நிறைவேற வில்லை. மாருக ஆசியாவெங்கணும், ஆபிரிக்கா வெங்கணும் கம்யூனிசம் எனப்படும் சர்வாதிகாரக் கொள்கை நவீன ஏகாதிபத்தியக் கொள்கை சரிந்துகொண்டு வருகிறது. இந் தியத் துணைக் கண்டத்திலும் இந்தச் சரிவு ஏற்படாமல் இருக்கிறதா! பெரு மளவு ஏற்பட்டுக்கொண்டுதான் வரு கிறது! காரணம், இன்று படித்தோ ரும், பாமரரும் கம்யூனிசம் என்ருல் என்னவென்பதைத் தெள்ளத் தெளிய அறிந்துகொண்டு விட்டார் கள். சர்வாதிகார முறை, ஏகாதி பத்திய முறை இவற்றையெல்லாம் அற்பமாக்கிக் காட்டும் கொடிய அடக்குமுறைதான் கம்யூனிசம் என்பது, விலங்குமுறைதான் கம்யூ னிசம் என்பது, மனச்சான்றுக்கு இடமளிக்காத இயந்திரமுறைதான் கம்யூனிசம் என்பது என்று நன் ருகத் தெரிந்துகொண்டுவிட்டார் கள்.

இனிக், கம்யூனிசத்தின் சரிவை யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது. இனி மக்களாட்சிப் பண்பை, மக்க ளாட்சி நெறியை கம்யூனிசம் எனப் படும் கொடிய சர்வாதிகாரத்தால் எந்தக் காலத்திலும் வெல்ல முடி யாது.

இனியேனும் இவற்றையெல்லாம் மனதிற்கொண்டு இங்குள்ள அந்தச் சிலர் உள்ளும்,புறமும் ஒரே பாங்கின ராவதற்கு முயல்வார்களாக! வெளிப் படையாக ஒன்றைச் சொல்லிக் கொண்டு இரகசியமாக ஒன்றைச் செய்து திரியும் கயமைத் தனத்தை விட்டொழிப்பார்களாக! மக்களாட் சிப் பண்புக்கு எதிர்ப்பியக்கம் நடத்த எண்ணும் கீழ்மையை விட்டொழிப் பார்களாக! அல்லதைச் செய்யத் துணியாமையும், நல்லதைச் செய்யப் பெருந்துணிவும்கொள்வார் களாக! அஞ்சுவதற்கு அஞ்சாமை கொள்ளமாட்டார்களாக! வாழ்க மக்களாட்சிப் பண்பு! வெல்க அற நெறி! வெல்க உரிமை வாழ்வு!

கூடி எதிர்க்கும் ஆற்றல்!

—[புலவர் இளஞ்செழியன்]—

"கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த(து) உண்ணாது இறக்கும்—இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்."

இது சங்க காலத்துச் சங்கநாதம். வரிவேங்கையின் வீர வாழ்வு இந்த வரிகளிலே தெரிகிறது. வேழத்தை வீழ்த்தி வெற்றி காணும் வேங்கை, ஞாலத்தை எதிர்பார்த்து வாழாதாம்; எச்சிலைப் புசிக்கும் பிச்சைக்காரப் புத்தி அதற்கு இம்மியும் கிடையாதாம்; இரந்துண்ணும் ஈனப் பழக்கமும் அதன் எழிலுக்கு இழுக்காம்.

ஆற்றல் கொண்டு தன் நகத்தால் அடிபட்டதையே போற்றிப் புசிக்குமாம். அதுவும் இடக்கைப் பக்கம் வீழ்ந்தால் அதை எடுத்துண்ண விரும்பாதாம். வீரத்துக்கு அழகு, தான் வீழ்த்தியது விழவேண்டும் வலமாக என்பது வேங்கையின் இலட்சியமாம். மிச்சத்தை மீதி நாளைக்குப் பயன்படுத்தும் கருத்தும் இந்த மிருகத்துக்குக் கிடையாதாம். நமது நாட்டு வீரத்துக்கு இந்தக் காட்டு வேங்கையின் வீரம் நல்லதோர் சான்று.

மண், விண் கிடைப்பதானாலும் மானத்தைப் பறி கொடுக்காதது நமது மரபு. மானம் நம் ஏனம். அதைவிட்டால் நமக்கு வாழ்வில்லை; வரலாறு இல்லை!

அந்த வீரம் இன்று வட எல்லையைக் காக்க வாரித் தரப்படுகிறது. இந்தியப் படைக்கும் சீனப் படைக்கும் வந்திருக்கும் இந்தச் சண்டை நமது பழைய வீரத்தை நோக்கி விடப்பட்டிருக்கும் 'சவால்'! என்று கருதுகிறது நமது இதயம்.

"சேரனே! சோழனே! பாண்டியனே! நீ வீரனே என்றால் வெற்றி பெற்றுப்பார் எம்மிடம்!" என்று தென்னாட்டின் பழைய வீரத் திருவுருவங்களை நோக்கி விட்டிருக்கும் அறைகூவல்தான் இது!

வீரம் எழுந்து நிற்கிறது இன்று! 'வெற்றி' என்ற மூன்றெழுத்துச் சொல்லையே சுற்றிலும் விளைத்திருக்கும் நமது வீரம் இன்று விம்மி நிற்கிறது!

தோல்விச் சொல் நமது அகராதிக்குத் தூரம்! தொடை நடுக்கம் நமது படைகளுக்குப் பகை! துவளல் நமது வரலாற்றில் இல்லை! வீரம், நம் மேனிக் கவசம். வெற்றி நம் விளைச்சல் தானியம். வீறு நடை நம் வரலாற்றுத் துவக்கம்.

வெறும் இந்திய வீரமட்டும் கலந்திருக்கவில்லை இப்போது. திக்கெட்டும் படையெடுத்து வென்ற வீரமும் கலந்து போராடுகிறது இப்போது! சீனா சேற்றில் புதையும்; இந்தியா வெற்றிக் கொடி நாட்டும்.

வீரமென்றால் நமது வீரம் கோர நினைவுகளின் வெளிப்பாடு அல்ல; கொலை வெறியின் பிரதித் தோற்றம் அல்ல; நமது வீரத்துக்கு அடிப்படை அறம், அன்பு, இன்னுமுள்ள பண்பு!

நீதியின் நேர்க்கோடு நமது திசை. நேர்மையின் பிறப்பிடம் நமது இருப்பிடம்!

சாந்தம், சமாதானம், சத்தியம் இவை காந்தியாரின் இலட்சியங்கள். சண்டை என்ற சொல்லை உச்சரிக்கவே அவர் தொண்டை நடுங்கிற்று. "நீதியே என் பாதை"யென்று மேதினியில் நடைபோட்டுக் காட்டிய நிலாப் பிறவி அவர். அறவழி அவருடைய ஆயுள்காலச் சிந்தாந்தம். அன்பு அவருடைய பண்புகளின் தலைமை. அவர் பாதம் நடந்த பாதையிலே நடைபோடுகிறது இன்றைய இந்தியா. பஞ்சசீலம் அதனுடைய நெஞ்சு; சமாதானம் அதன் உடன்பிறப்பு; சமத்துவம் அதன் மோகன ஆபரணம்; சமதர்மம் அதன் நெற்றித் திலகம்!

மண்ணாசை அதன் எண்ணத்தில் நிழலாடியதுகூட இல்லை! இந்தியா யாருக்கும் ஓட்டளிக்காத நாடு. நடுநிலை இலட்சியத்தின் அடி ஆரம்பப் பூமி இது.

இதன்மீது படையெடுக்க எவனுக்குத் தோன்றும்?

சீனனுக்குத் தோன்றியிருக்கிறது. தோன்றி அது வினைவடிவு கொண்டு விட்டது! இது கண்டு இயற்கையே விம்முகிறது! அன்பு, அறம் அனைத்தும் சேர்ந்து அழுகிறது! நட்பு சீனனை நோக்கிக் காரி உமிழ்கிறது!

வஞ்சகம்—வாயிதழ் சிநேகிதம் இவற்றில் வழக்கமுள்ளவன்போல் இருக்கிறது சீனன்; "பாய்—பாய்" என்று பழகிப் பாதகம் புரிவதில் பழக்கமுள்ளவன்போல் இருக்கிறது சீனன். பழகினான்; பாழ்படுத்துகிறான்!

துப்பாக்கிக் கர்ச்சனையைத் தொடர்ந்து நடத்திவிட்டு இப்போது சமாதான அர்ச்சனையைத் துவக்கியிருக்கிறான் சீனன். இது நாடகமா? நடிப்பா? நாடு சந்தேகப்படவில்லை. இது வடிகட்டிய பித்தலாட்டம் என்று எப்போதோ முடிவுகட்டி விட்டது.

சீனா ஒரு இரும்புத்திரை நாடு. இருட்டறைப் பிரதேசம். சூது, சூழ்ச்சி இவற்றின் சுரங்கம்! வெள்ளை உள்ளம் அதற்கு வெகுதொலைவு! கள்ளச் சந்தையே அதன் கை முதல்! திருட்டின் திரட்டு சீனா; நம்பிக்கைக்கு இடமில்லை. நம்பி நாசமாக நாம் தயாராயில்லை.

ஈனப் பண்பாடுகளின் மொத்தப் பிறவி சீனன்; உள்ளத்திலுள்ளதை உதட்டால் மறைப்பான்; உதடு உச்சரிப்பதை உள்ளத்தால் மறுப்பான்; பாம்பைத் தின்று பழக்கப்பட்டவனுக்குப் 'பண்பாடு' இப்படியிருப்பது சரிதான்!

பெண் வெறி—பொன் வெறி—மண்வெறி இவற்றில் ஆபத்தானது மண்வெறி! அனுமதிக்கமுடியாதது; உரிமைகளை விலங்குமாட்டி முறிக்கும் விபத்து மண்வெறியில் புதைந்து கிடக்கிறது. ஜனநாயகத்தைக் கத்திகொண்டு துரத்தும் விபரீதமும் மண்வெறியில் அடக்கம்.

மனிதனுக்கு வரக்கூடாது மண்வெறி; வந்துவிட்டது சீனனுக்கு; வரலாறு சீனனை இனி மகிழ்ந்து எழுதாது. இரத்த வெறியனின் வரலாற்றை எப்படி வரலாற்றாசிரியன் பேனா இனிப்போடு எழுதமுடியும்?

கூடி எதிர்க்கிறோம் நாம்; கொலைகார நாட்டின் நெடுங்கால அநியாயம் இனி நீண்டகாலத்துக்கு இருக்காது. சமர் நமக்குப் புதிதல்ல; அதே நேரம் சமாதானம் நமக்குப் பழசும் அல்ல.

இரண்டுக்கும் தன்னைப் பக்குவப் படுத்திவைத்திருக்கும் நாடுதான் இந்தியா! சமரென்றாலும் சரி! சமாதானமென்றாலும் சரி. ஆனால், பேசப்படும் சமாதானத்தில் உடைமைகள் — உரிமைகள் பறிபோய் விடக்கூடாது. நியாய வரம்பு அத்து மீறிவிடக் கூடாது.

கூடி எதிர்ப்போம்! கொள்கையைக் காப்போம்! வெற்றிபெறுவது உறுதி! இல்லையேல் வாழ்வில் இறுதி!

"எதையும் தாங்கும் இதயம்…!"

குழலோன்

'சிறுகதைப் பரிசுப் போட்டி'
ஆசிரியர், 'அன்பு' காரியாலயம்
சென்னை-5

என்று, முகவரி தீட்டி, தேவையான தபால் தலைகளை ஒட்டி, ஒருமுறைக்கு இருமுறை சரிபார்த்துத் தபாலில் சேர்த்தபிறகுதான், எழுத்தாளர் முகிலன் அமைதிபெற்றார். அதுவரை அவர் உடலையும், உள்ளத்தையும் ஏதோ ஒரு இனம் தெரியாத பரபரப்புச் சூழ்ந்து நின்றது. ஏன் இருக்காது? ஆயிரம் ரூபாய் அல்லவா அதற்குப் பரிசு!

அந்தத் தொகையை நம்பி, அவர் ஏதேதோ செய்துவிட்டார்! அவர் எழுத்தில் அவ்வளவு நம்பிக்கை அவருக்கு! நம்பிக்கையில்தானே மனிதனின் வாழ்க்கை கரை காணத் துடிக்கிறது.

சாய்வு நாற்காலியில் சாய்ந்த முகிலனிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டு, இரண்டாகப் பிரிந்தது! ஆம், அவர் எண்ண அலைகள், இறந்தகாலம், நிகழ்காலம் எனும் இருகரைகளிலும் மோதிச் சிதறின. சிதறியவைகளைக் கோர்வை ஆக்கி மனத்தாளில் எழுதத் தொடங்கினர்.

O

அன்று நீலமேகமாக இருந்த முகிலன், வறுமையின் நிழல்படாமல் வளர்ந்தார். அப்போது முதலே கதைப்புத்தகங்கள் படிப்பதில் ஆர்வம் அதிகம். பள்ளியில், பாடப் புத்தகங்கள் நடுவில் கதைப் புத்தகங்களை வைத்துப் படிப்பதில் அலாதி ஆவல் அவருக்கு! அப்படிப் படித்தால்தான், கதையின் முழுமையை உணர்ந்ததாக அமைதி ஏற்படும் அவருக்கு. நண்பர்களிடமிருந்து, புத்தகங்கள் வாங்கி வருவதில், அவருக்கிணை அவரே! ஆனால் வாங்கின புத்தகங்களைத் திருப்பித் தராமல் வீட்டிலேயே நூல் நிலையம் தோற்றுவிப்பவர்கள் எத்துணைபேர்? அந்தப் பட்டியலில் மட்டும் இவர் பெயரைச் சேர்க்கக்கூடாது.

ஒரு நாள், 'நாமும் ஏன் கதை எழுதக்கூடாது?' என்ற எண்ணம் கேள்விக் குறியாகி நின்றது அவர் மனதில். விரைவில், கேள்விக்குறி ஆசையாகி, ஆசை வெறியாகி, ஒரு 'காதல் கதை' எழுதி அவருக்குத் தெரிந்த பத்திரிகை ஆசிரியரிடம் அளித்தார்; அவரோ………

'தம்பி! ஒரு உயிரின் வாழ்க்கை, குழந்தைப் பருவம், பள்ளிப்பருவம், காளைப்பருவம் என்று, படிப்படியாகத் தோன்றி வளருகிறது. அதுபோன்ற முறையான வளர்ச்சிதான் மனிதனின் வாழ்க்கைச் சூழ்நிலையில் அமையவேண்டும். அதுதான் நல்வழிக்கு வகையான பாதை. வளருவதற்கு முன்பே, 'வளர்ந்துவிட்டோம்,' என்ற எண்ணம் மனதில் தோன்றுமாயின், அது, நீ வாழ்க்கையின் தோல்விப்பாதையில் முன்னேறிக்கொண்டிருக்கிறாய் என்று பொருள். ஆகவே, நீ இவ்விளம் வயதில், சிறுவர்களுக்கான நீதிக்கதைகள் எழுதப் பழகு. கதை வெளியிடப்படவேண்டும் என்ற எண்ணத்தைவிட, அந்தத் தகுதி பெறவேண்டும் என்றஆர்வ வித்தை மன மண்ணில் புதைத்து, அது துளிர்விட்டு வளர்ந்து, பூ மலரும்போது பறிக்க முயலுதல்தான், உன் எதிர்காலக் கனவை, நினைவாக்கும்! அதைவிட்டு, இப்போது முதலே, காதல், கைவிடுதல், கயமை முதலியவைகளை ஆராய முற்படாதே! வளர்ச்சி பெருத உன் பிஞ்சு இதயம் வெம்பிவிடும்!'' என்று தன் பாணியில் நீண்ட பிரசங்கம் செய்தார். நீலமேகமோ, அவர் கூறியதின் பொருளைவிட, 'ஏன் இவரிடம் வந்தோம்' என்ற எண்ணத்தையே மனதில் அசை போட்டுக்கொண்டிருந்தார்.

ஓடிக்கொண்டிருந்த காட்டாற்றைத் திசை திருப்பிவிட்டதுபோல், எழுதும் ஆவல், பெரியவரின் வார்த்தைகளால் திருப்பிவிடப்பட்டது. நாட்கள் விரைந்தன! நண்பனின் கதை ஒன்று பத்திரிக்கையில் வெளிவந்தது! வெட்டிவிட்ட முருங்கைக் கிளை துளிர்விடுவதுபோல், முகிலனின், இதயத்தில் பழைய ஆர்வம் துளிர்விட்டது. அன்றாட வாழ்க்கையில் எழும் ஓராயிரம் கேள்விக் குறிகளில், ஒன்றை எடுத்து, ஆராய்ந்தார்! 'அந்த ஆராய்ச்சி ஒரு சிறு கதையாகியது. அந்தச் சிறு கதையும் 'அன்பு' பத்திரிக்கையில் வெளியாகியது. பத்திரிக்கைப் பிரதி ஒன்றும், தபால் உறை ஒன்றும் அவருக்கு வந்தது. அந்தப் பிரதியை கண்களில் ஒத்திக்கொண்டார். மார்பில் புதைத்து, இதயத்துடன் உறவாடவிட்டார். அவரது இதயத் துடிப்பை, அந்த இதழுக்கு எடுத்துக் காட்டினர்! குழந்தை பெற்றதாய் எவ்வாறு மார்போடு அணைத்து, இத

யத்து இன்பத்தை எல்லாம் அதற்கு உணர்த்துவாளோ, அதுபோல!

அஞ்சலுறையில் அவர் பெயருக்கு, ஒரு உண்டியல் இருந்தது—கதைக்கான தொகை! முகிலனின் உள்ளம் உணர்ந்த வேதனை எழுத்தில் வடிக்க முடியாதது. அந்த இளம் எழுத்தாளரின் மனம் தத்துவ வாதமிட்டது.

'சே! என்ன பத்திரிக்கை உலகம். எழுத்துத் திறமையை, இதயத்தின் வலிமையை உணரவன்றோ எழுதினோம்! கேவலம், இந்தப் பணத்திற்காகவா நம் எழுத்தை விலைகூறுவது? எழுத்தாளர்களை இன்றளவும் மாற்றார் முழுமையும் உணராமல் இருப்பதற்குக் காரணம், பாழும் பணத்திற்குத்தன் உயிரினும்மேலான கற்பனையை விலை கூறுவதுதான்! கற்பை விலைகூறும் மாதர்களின் நிலையிலல்லவா, கற்பனையை விலை கூறும் எழுத்தாளர்களின் நிலையும் ஒன்றுபடுகிறது' என்ற எண்ணத்தின் முடிவாக, அந்த உண்டியலைப் பத்திரிக்கைக் காரியாலயத்திற்கு அனுப்பிவிட்டார். அன்றைய நிலை அவ்வாறு செயல் படுத்தியது. தந்தை இருக்கிறார், சம்பாதிக்க—தேவையைப் பூர்த்தி செய்ய. ஆனால், இன்று?

ஒருவரா, இருவரா இவர் பொறுப்பில்? ஐந்துபேரல்லவா! மங்கலநாண் கண்டதைத் தவிர, இதுவரை வேறேதும் காணாத மனைவி மலர்க்கொடி, கண் தெரியாத, உடல் ஆடி, உள்ளம் ஓய்ந்த தந்தை, வறுமையை எதிரொலிக்கும் இரண்டு இளம் உள்ளங்கள். மாதம் வரும் நூறு ரூபாயில், இவ்வளவு பேர் தேவைகளையும் உள்ளடக்கவேண்டும்.

'முதல் தேதி வந்தால், மளிகைக் கடைக்குக் கடன் திருப்புவதா? பிள்ளைகள் இருவருக்குப் பள்ளிச் சம்பளம் கட்டுவதா? கண்பார்வை கெட்ட தந்தைக்கு மருந்து வாங்குவதா? எதையும் கேட்காத மனைவி மலர்க்கொடி மனம் திறந்து, மானம் மறைக்கக் கேட்கும் புடவை வாங்குவதா? முதல் தேதி மாலை, அலுவலகத்தில் காத்திருக்கும் ஈட்டிக்காரனுக்கு, வட்டி கொடுப்பதா? என்ற கேள்விக் குறிகளுக்கு விடை காணாமல் திகைக்கும் போதுதான், 'சிறுகதைப்பரிசுப் போட்டிக்கான' விளம்பரம் வெளிவந்தது. அனுபவத்தை வடித்து, வறுமையை, இந்நாளின் வாழ்க்கை நிலையைப் பிழிந்து எழுதிய சிறுகதையல்லவா? நிச்சயம் பரிசு கிடைக்கும் என்ற நம்பிக்கை! ஆனால் நடக்குமா என்று எண்ணிய போது, அவர் இதயம் கேள்விக் குறி ஆகியது. நம்பிக்கை கேள்விக்கு விடையாகியது.

நம்பிக்கைதானே வாழ்க்கை எனும் வீட்டிற்குத் தூணாகி நிற்கிறது! தூண் சரிந்தால்.....?

விடைகாணாத, முடிவறியா ஒரு விளைவு......!

O

போட்டியின் முடிவு அறிவிக்கப்பட்டது. ஆவலுடன், கடையிலிருந்துகடனாகப்பிரதி ஒன்று வாங்கி வந்தார். படித்தார்......இதயத்தை கையில் பிடித்துகொண்டே — ஆம், அவர் இதயத்தைக் கையால் பிசைவது போன்ற வேதனை—சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். தன் கதை, மாற்றார் பெயர் போட்டுப் பிரசுரிக்கப்பட்டிருந்தது. உலகமே இருண்டதுபோல் தோன்றியது! இதயத்தின் வலி நிமிடத்திற்கு நிமிடம் அதிகமாகியது! குடும்பத்தின் தேவைகள்—வறுமையின் காட்சிப் பொருள்கள்—ஒன்றன்பின் ஒன்றாகக் கண்முன் தோன்றி மறைந்தன. கடன்காரர்கள், தன் இதய பீடத்தில், கோர நடனமிடுவது போன்ற பிரமை! 'ஓ'வென்று அலறவேண்டும் போல் தோன்றியது அவருக்கு! ஆனால் நெஞ்சுக் குழியில் ஏதோ அடைபட்டது போன்ற ஒரு வேதனை ......மயங்கி வீழ்ந்தார்.

வாரம் ஒன்றுசென்றது. படுக்கையில், எழுந்து உட்காரும் அளவுக்கு தெம்புவந்தது அவருக்கு. உடலுக்கு வந்த அந்தத்தெம்புகூட உள்ளத்துக்கு வரவில்லை. ஆனால் அந்தக் கடிதம் வந்தபிறகு......ஆம்! அன்று அவர் பெயருக்கு ஒருகடித உறை வந்தது.

அதில்:

உயர்திரு முகிலன் அவர்கட்கு,

அறிமுகமில்லாதவன் நான்! ஆனால், அறிமுகப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவையில் இருக்கும் நான் சிரம்தாழ்த்தித், தங்களிடம் மன்னிப்புக்கோருகிறேன். நான் ஒரு அஞ்சல் ஊழியன்!

நீண்டநாட்களாகவே, கதை எழுத ஆவல்கொண்டநான் 'அன்பு' காரியாலயத்திற்கு அளிக்கவேண்டிய தங்கள் சிறுகதையை, மறைத்து, வேறு தாளில் என்பெயரில் எழுதி அனுப்பினேன். பரிசும் பெற்றது, பின் விளைவை நோக்காது நான் செய்த தவறு, எவ்வளவு வேதனையை அளிக்கிறது என்று இத்தாளால் உங்களுக்கு விவரிக்க முடியாது. நான் செய்த தவறு, என் இதயத்தை நாளுக்கு நாள் மென்று கொண்டே இருக்கிறது. மனச்சான்று, 'துரோகி! துரோகி!!' என்று இடித்துக் கூறிக்கொண்டே இருக்கிறது. 'கடமையினின்று தவறியவன், கற்பனையைத் திருடியவன்' என்று ஓராயிரம் குரல் இதயத்தினின்றும் பீறிட்டு, என் செவிகளில் மோதிச் சித்தரவதை செய்கின்றன. நானும் உணர்ச்சி உள்ள மனிதன் தானே; இத்துணைநாள் கடமையை,

திராவிட நாடு பொங்கல் மலர்

விற்பனையாளர்களுக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலர் மிகச் சிறந்த முறையில் வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. விலை ரூ. 1—50.

தங்களுக்குத் தேவைப்படும் மலரின் எண்ணிக்கை விபரத்தை முன்னதாகவே 25—12—62-க்குள் தெரிவிப்பதுடன், மலர் ஒன்றுக்குக் கழிவு நீக்கி ரூபா 1-15 வீதம், 28—12—62-க்குள் அனுப்பி வைக்கவும்.

பொறுப்பாளர்.

குறிப்பு:—பழைய பாக்கி முழுவதும் அனுப்பாதவர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்பப்படமாட்டாது.

வாழ்க்கையின் மைல்கல்லாக இலக்குவைத்து நடந்தவன்தானே!

'பாலு, நீ, முகிலனுக்கு மட்டும் துரோகம் இழைக்கவில்லை, கடமையை உயிராகக்கொண்ட தபால்காரர்கள்சமுதாயத்திற்குத்துரோகம் செய்திருக்கிருய்! ஆகவே நீ ஒரு 'சமூகத்துரோகி' என்று மனச்சான்று இடித்துக் கூறியது. ஆகவே தங்களுக்கு இக்கடிதம் வரைந்து, இதன்மூலம் மன்னிப்புக் கோருகிறேன். உங்களைக் காணக்கூட அருகதையற்றவன் நான்! இக்கடிதத்துடன் இணைத்துள்ள, பரிசுக்கான உண்டியலைப் பெற்றுக்கொள்ளவும். தினைவிதைத்த நீங்களே அதன் பயனைப் பெறுங்கள். தங்கள் மேன்மையான, மென்மையான இதயம் என்னை மன்னிப்பதை மானசீகமாக உணருகிறேன். நன்றி.

தங்கள் அன்புவேண்டும்,

பாலு.

திராவிட நாடு பொங்கல் மலர்

சந்தாதாரர்களுக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூபா 1—50 ஆகும். மலர் பெற விரும்பும் சந்தாதாரர்கள் தங்கள் சந்தா எண்ணையும் குறிப்பிட்டு ரூ. 1—00 முன் பணமாக அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேம்.

பொறுப்பாளர்

திராவிட நாடு.

'என்ன அப்படி பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? ஓய்வெடுத்துக் கொள்ளக்கூடாதா?' என்று மலர்க்கொடியின் குரல்கேட்டு, உலகை உணர்ந்தார்.

கண்ணில் நீர்பனிக்க, அமைதியாக அக்கடிதத்தை, அவளிடம் அளித்தார். படித்த அவள் பதறினுள்.

'ஏனுங்க! உடனே இக்கடிதத்தைப் பத்திரிக்கை ஆபீசுக்கு அனுப்புங்கள்......பத்திரிக்கையிலே போட்டு, அந்த ஆள்மேலே வழக்குப்போடலாம். மத்தவங்களுக்கும் இது ஒரு பாடமாக இருக்கும்! என்ருள்.

பாவம்! பெண்தானே அவள்! உணர்ச்சிக்கு இடம்கொடுத்தாள். உள்ளத்தை மறந்துவிட்டாள்.

அமைதியாக, ஆனுல் ஆணித்திறமாக முகிலன் கூறத் தொடங்கினர்: 'மலர்க்கொடி ஆத்திரப்படாதே. அக்கடிதத்தை வெறும் தாளாக நினைக்காதே. அந்த நல்லவரின், அறியாமையால் தவறு செய்த குழந்தை மனம் கொண்டவரின் இதயம் அது. மனச் சான்றுக்குப் பயந்தவரின்—அதன் சித்திரவதை தாளாமல், தன் தவறுணர்ந்தவரின் மன்னிப்புக் கடிதம் அது. மனச்சான்றுக்குப் பயந்து மன்னிப்புக் கோரும் அவருக்கு மன்னிப்பு அளிப்பதுதான் நமக்கும் அழகு! அவருக்கும் ஆறுதல் அளிப்பது. இக்கடிதத்தைச் சாட்சியாகக்கொண்டு, அவரை எதுவேண்டுமாஞலும் செய்ய முடியும் என அறிந்திருந்தும், என்மேல் கொண்ட நன்னம்பிக்கையில், மன்னிப்புக் கேட்கும் அவரை நடுத்தெருவில் நிற்க வைப்பதில் நமக்கென்ன இலாபம்? 'தவறுணர்ந்தவனை மன்னிக்கும் மனம் படைத்தவன்தான் மனிதன்.' 'பாவம்! ஒரு ஏழையின் ஆவல் நம்மால் நிறைவு செய்யப்பட்டது' என்ற அமைதி போதும் நமக்கு. அவர் சட்டத்தின்முன் நிற்க வைக்கப்பட்டால், அவரின் மனைவி, குடும்பம் என்னுவது என்று யோசித்தாயா? மலர்க்கொடி, உனக்கே அந்நிலை ஏற்பட்டால் எவ்வளவு வேதனைப்படும் உன் மனம்—யோசித்துப் பார்! நான் அக்கதையை, 'அந்த ஆயிரம் ரூபாய்களுக்காகத்தான்' எழுதினேன். ஆம்! என்னுடைய குறிக்கோளெல்லாம், கதையின் கருத்தில் பதியவில்லை; மக்களுக்குப் பயன்படுமா? என்ற கேள்வியில் சுழலவில்லை. ஆயிரம் ரூபாய் கிடைக்குமா? வறுமை என்ற கொடியவனுக்கு அந்த ஆயிரம் ரூபாயை இலஞ்சமாகக் கொடுத்து, ஓட்டுவோமா? என்ற எண்ணத்தில்தான் பதிந்திருந்தது!

அந்தப் பணமும் கிடைத்துவிட்டது!நண்பரும் கதையின் வளத்தை, கருத்தைச் சிதைக்கவில்லை.ஆகவே, எதிலும், நல்லதை, உயர்ந்ததை எண்ணிப் பயன் அடைய நினைப்பது தான் அறிவுடைமை! என்ன இருந்தாலும் பெண்தானே நீ! குறுகிய எல்லையில் வாழ்பவள் நீ! உணர்ச்சிக்கு இடம் கொடுக்கிருய்! சரி, நீபோய் உன் கடமைகளை ஒழுங்காகச் செய்!' என்று முடித்து, துறவு பெற்ற புத்தரின் முகம்போல் அமைதி தவழ, கண்களை மூடிக் கொண்டு, படுக்கையில் சாய்ந்தார்!

ஆம்! வாழ்க்கையில், ஒன்றன்பின் ஒன்ருக வந்த இடர்ப்பாடுகளைத் தாங்கித் தாங்கி, மரத்துவிட்ட அந்த நல்லவரின் இதயம், இனி எதையும் தாங்கும் வலிமை பெற்றதில் வியப்பில்லை! உலகில் தனக்காக எந்தத் தவறுகள் இழைக்கப்படினும், கவலைப்படாத அவரின் 'எதையும் தாங்கும் இதயம்', குறை வாழ்க்கையிலும், நிறை செய்யாமல் போகுமா?

●



அறத்தாறு

[மணிவண்ணன்]

—பிடிநி—

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலர் வாக்கையும், 'யாதும் ஊரே யாவருங்கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் கருத்தையும் ஆழ்ந்து சிந்திப்பவர்களின் உள்ளத்தில் உதிப்பது என்ன? உலகில் வாழும் மக்கள் அனைவரும் ஓரினமே; நிறத்தாலும், மொழியாலும், பற்றுக்களாலும் வேறுபட்டிருப்பினும், மக்களினம் என்ற வகையால் ஓரினத்தவரே யென்பது நன்கு புலப்படும்.

மனிதர்க்குள் நடை, உடை, மெய்ப்பாடுகளினாலும், பிறப்பாலும் எவரும் உயர்ந்தவர் இல்லை. அவரவர், தாம் எண்ணும் எண்ணத்தாலும், பிறர் நலம்நாடும் பெருந்தகைமையான அற உணர்ச்சியாலுமே உயர்ந்தவர் ஆகின்றனர். ஆனால் இவைகளைக் கடைப்பிடிக்கின்றோமா என்பது,

"அறத்தா றிதுவென வேண்டா; சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

என்ற திருவள்ளுவரின் வாக்கு நம் சிந்தையைத் தூண்டிவிடுகிறது.

அதோ, ஒரு வழிப்பாதை ஒன்று சேய்மையில் செல்கிறது. அங்கே, ஒருவித ஒலி அமைந்த பாடலை நால்வர் பாடிக்கொண்டே பல்லக்கைச் சுமந்து செல்கின்றனர். பல்லக்கின் உள்ளே திரண்டு பருத்த உருவமும், இறை அன்பர் என்று எடுத்துக் காட்டும் சின்னங்களும் கொண்ட ஒருவர் அமர்ந்திருக்கிறார்.

'அறனல்லாத தீய வினைகளைச் செய்த நால்வரும் பல்லக்கைத் தோள்மீது வருந்திச் சுமக்கின்றனர். அறம் அமைந்த நல்வினைகளைச் செய்த காரணத்தால் பல்லக்கின் உள்ளே மகிழ்வுடன் அமர்ந்து செல்கிறார்.' இத்தகைய எண்ணம் அக்காலத்து மக்களின் கருத்தில் பதிந்திருந்தது.

திருவள்ளுவர் இதைச் சிந்தனை செய்தார். இதுவா அறத்தின் பயன் என்று தன்மனத்தில் வினாக்குறியை உண்டாக்கிக்கொண்டார். இறுதியில் அறத்தின் பயன் இதுவன்று என்ற முடிவையும் கண்டார். எப்படி?

நடை, உடை, தோற்றங்களினால் மனிதன் உயர்வு அடைவதில்லை. அவன் மனத்தில் மாசு இல்லாமல் செய்யும் செயல்களே அவனை உயர்ந்தவன் ஆக்குகிறது. சிலர் தம் மனத்தில் மாசுகொண்டு, புறத்தில் மட்டும் நல்லவராய்ப் பிறர் கண்ணில் படும்படி நடக்கின்றனர். அத்தகைய ஒருவர் பல்லக்கில் ஊர்ந்து செல்லும்பொழுது அவரை அறம் புரியும் அறவோர் என்று எவ்விதம் இயம்புவது?

அதனால், வஞ்ச மனத்துடன் படிற்றொழுக்கம் உடையவரும் சிவிகை ஊர்வதால், அறவழி இதுதான் என்று சொல்வதில் பொருத்தம் இல்லை.

இதுபோலவே, நம் காலத்திற்கேற்ப ஓர் எடுத்துக்காட்டுக் காண்போம்.

ஓடும் புகைவண்டியிலிருந்து பிறர் பணத்தை ஒருவன் களவாடினான். அவன் வெள்ளை உடையும், பிறர் கண்டால் ஐயுறுத நடையும் உடையவனாய் இருக்கிறான். புகைவண்டி நின்றவுடன், அவன் இறங்கி வெளியில் வருகிறான். உடனே, அருகில் இருந்த கைவண்டியை அழைத்து அதில் ஏறிக்கொண்டு உணவு விடுதிக்குச் செல்கிறான். அவ்வண்டியில் ஏறி ஊர்ந்து செல்பவன் அறம் புரிந்தவனா? அவனுக்கும், வண்டியை இழுப்பவனுக்கும் இடையில் காணப்படுவது அறவழியா என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா!

இதோ, புகைவண்டிப் பாதையின் ஓரத்திலே ஒரு சிறு குடும்பம். கணவன், மனைவி, குழந்தை ஆகிய மூவரும் சேர்ந்துள்ளனர். வீட்டிற்குக் கூரை இல்லை; சுவர்கள் இல்லை; தூண்களும் இல்லை. வானமே கூரை; வெட்டவெளியே அவர்களின் வீடு. பக்கத்தில் ஒரு கைவண்டி இருக்கிறது. அதுவே அவர்களின் வயிற்றை வளர்க்கும் கருவியாகும்.

அன்றாடம் கிடைக்கும் ஊதியத்தால் ஒரு வேளையோ இருவேளையோ கஞ்சி காய்ச்சிக் குடிப்பதுடன் குழந்தையையும் காப்பாற்றுகின்றனர்.

நேரம் ஆகிவிட்டது. அந்த 'வீட்டு'க்குரியவன் கைவண்டியை இழுத்துக்கொண்டு கடைவீதி வழியே செல்கிறான். இவனைக் கண்டால் தீவினை புரிபவனைப்போல் தெரியவில்லையே! நாள்தோறும் உழைத்துவந்த ஊதியத்தைக் கொண்டே உணவு கொள்கின்றான். பிறர் பொருளைப் பறிக்கவும் இல்லை; பல்லைக்காட்டி கெஞ்சவும் இல்லை. அதனால் இவனைத் தீவினை செய்தவன் என்று இவன்மேல் எவ்விதம் குற்றம் சாட்டுவது!

ஆகவே நல்வினை செய்ததினால் சிவிகையில் ஊர்ந்து செல்கிறான் என்றும், தீவினை புரிந்ததினால் சிவிகையைத் தூக்கிச் செல்கிறான் என்றும் கூறி, இதுதான் அறத்தின் பயன் என்று காட்டுவது பொருத்தமுடைய கருத்தாக இல்லை. அவ்விதமெனில், திருவள்ளுவர் அக்குறளினால் நமக்கு அறிவிக்கும் கருத்து என்ன?

மனிதரில் உயர்வு தாழ்வு இல்லை; ஊர்ந்து செல்பவன் தூக்கிச் செல்பவனைக் கண்டு தாழ்ந்தவனாக நினைக்கிறான். மனிதனை மனிதன் தூக்கு[வது] இழிவான செயல் என்பது மட்டு[மன்று]; வெறுக்கத் தக்க நிகழ்ச்சி[யு]ம் ஆகும்.

அதனால், சிவிகையைத் தூக்[கு]பவனும், அதன்மேல் அமர்ந்து ஊர்ந்து செல்பவனாகிய இருவருக்கும் இடையில் இருப்பதை அறத்தின் பயன் என்று கூறவேண்டா மென்பதே மேற்காட்டிய திருக்குறளின் பொருளாகும் என்று முடிவாகக் கூறலாம்.

இத் திருக்குறளின் வாயிலாக நமக்குத் திருவள்ளுவர் உயர்வு தாழ்வு என்னும் பேதமற்ற சமுதாயத்தை உண்டாக்கி வழி காட்டுகிறார்.

✻

4-ம் பக்கத் தொடர்ச்சி

"களவியல் படித்துள்ளாய், அதன்" என்றேன். நாணம் என்னும் பாணம்! ஆமாம்! இரண்டுபேர் மட்டுமேயுள்ள அப்போதும் எப்படியோ அது—நாணம் வந்துவிட்டது. கன்னம் சிவப்புத்தான்—தொடர்ந்தேன்.

'களவும் அகத்து மற' என்று கொள்ளல்வேண்டும். களவு—'களவினல் ஆய ஆக்கம்' என்ருர் வள்ளுவர். அங்கு களவிற்கு யாது பொருளோ, அதே பொருள்தான் இங்கும். 'நன்றல்லதை அன்றே மறப்பது நன்று' என்ருர். நன்ருல்லாத ஒன்றை, அன்றே—அது போழ்தே மறந்துவிடவேண்டுமாம். அதேபோல, 'களவும் அகத்து மற.' களவை உள்ளத்தாலும் எண்ணுதே! நினைவு கொண்டிருக்காதே! என்பதுதான் சரியாகும். சிலர் பொருள்கொள்வதுபோல், 'களவும் கற்று' அல்ல; களவை நினைத்தலே தீது; தீயதைப் பார்த்தல்; கேட்டல்; பேசல் தீதன்ருே? உள்ளத்தால் உள்ளலும் தீது; வெள்ளைமனம் கொள்ளைபோதல் தீது; என்னும் தமிழர் நெறி, களவைக்கற்றல் வேண்டும்; பின் மறத்தல் வேண்டும் என்று கூறுமா? தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டுமன்ருே? பழகிய ஒன்று தொடர்தல் இயல்பே! வள்ளுவர் இன்பத்துப்பாலை இறுதியில் வைத்தார்; இன்பத்துப்பாலில்திளைத்தவர்கள் மறத்தல் அரிதாகும் அச்சுவையை; அச்சுவையோடு இறந்து போதல் நடக்கும்; மறத்தல் நடவா. ஆதலின் களவு என்பதற்குக் களவியலுமல்லவென்க. இறுதியாக, 'களவும் அகத்து மற' என்பதே சரி! எண்ணிப்பார்! புரியும்!" என்றேன். சிரித்த செவ்வாழைத்தோப்பு 'என்னத்தான்' என்றிட, 'ஆமாம்! உன்னத்தான்தான்' என்றேன்.

'என்ன அத்தான்! என்று சொன்னேன். நீங்கள் என்ன சொற்களை ஒட்டவைக்கின் றீர்களே!' அவள்.

'பின் என்ன வெட்டிவிடவா நான்.'

'ஒட்டவும் வேண்டாம், வெட்டவும் வேண்டாம்' என்று குறள் நூலை விரித்தாள். குறளில் ஒன்றைக் காட்டினுள்.

'எதையாவது படித்துக்கொண்டிரு!' என்று சொன்னதற்கு இப்படிச் சந்தேகங்கள் கேட்டு என்னை வாட்டலாமா? முறையா?' என்றேன்.

'குறளைப் பாருங்கள்; படியுங்கள்; பின் கூறுங்கள்' எனச் சொற்கள் பின்னி நின்றன.

1284-ஆம் குறள் அது. அதில் ஐயமாம்! ஐயத்தைக் கொய்தாக வேண்டும்! நான் வென்றேனு? அவள் வென்ருளா?

ஊடற்கண் சென்றேன் மன் தோழி
அதுமறந்து
கூடற்கண் சென்றது என் நெஞ்சு.
1284-குறள்.

இயற்கை வென்றது — என்னும் பாட்டோசை வானில் மிதந்து வந்தது.

★

நரியின் நட்பு

[பண். நெடுமாறன்]

நீண்ட நாட்களாகவே கிழட்டு நரியொன்றிற்கும், காக்கையொன்றிற்கும் நெருங்கிய நட்பு. அன்பு கொண்டு வாழ்தலைப்போன்ற ஓர் அறம், உலகில் வேறென்றுமில்லையென்று உணர்த்துவதுபோலிருந்தது அவைகளின் நட்பு. கிழட்டு நரியினல் முன்போல் ஓடியாடி உணவைத்தேட முடிவதில்லை. காகம் தனக்கு இரைதேடுகையில், நரிக்கும் சேர்த்தே இரை தேடிக்கொண்டு வரும். சிற்சில சமயங்களில், தனக்கு இரை கிடைக்காமலிருந்தாலும், காகம் அதைப் பொருட்படுத்தாது, நரிக்கு மட்டும் ஏதாவது இரைதேடிக்கொண்டு வந்தது.

நாளாக நாளாகக் கிழட்டு நரிக்கு உடலில் சற்று வலுபெறவே, தான் பதுங்கியுள்ள புதரைவிட்டுவெளியே வர ஆரம்பித்தது. வெளிக்காற்று நன்கு பட்டவுடன் இயற்கையான அதன் குணம் மீண்டும் வந்தது. தனக்கு உணவு தரும் காகத்தையே சாப்பிட்டுவிட வேண்டுமென்ற ஆசை எழுந்தது.

ஓர் நாள்—

கிழ நரி தனது பேச்சை ஆரம்பித்தது, "காக்கையக்கா!...... உன்னுடைய இனிமையான குரலைக்கேட்டு நீண்ட நாட்களாகிவிட்டன. நல்ல பாட்டாகப் பாடேன்" என்றது. காக்கையும் பாடிற்று உற்சாகமுடன். நரியும் கண்களை மூடியவாறே பாட்டை இரசிப்பதுபோல் நடித்தது. பாட்டு முடிந்தவுடன் "போதுமா?" என்று கேட்டது காக்கை.

"காக்கையக்கா! உன்னுடைய இனிமையான குரலைக் கேட்டவுடன் உனது மேனியைத் தொட்டுப் பார்த்து மகிழவேண்டும்போலிருக்கிறது." என்றது நரி. பழகிய அன்பினுல் காக்கையும் நரியின் சூதினை அறியாமல் மரக்கிளையினின்று பறந்து வந்து நரியின் எதிரே அமர்ந்தது. கிழட்டு நரி கொஞ்சம்கூட நன்றியை நினைக்காமல் காகத்தின்மீது பாய்ந்துஅதைக் கொன்று, இறந்த காகத்தை கவ்வியபடி புதருக்குள் சென்றது.

மறு நாள்—

நரி புதரைவிட்டு வெளியே வந்தது. முன்தினம் நடந்த நிகழ்ச்சிகளை, அதன் கொடுமையான நாவில் நீர் ஊறுமளவிற்கு நினைத்து மகிழ்ந்தது.

நேரம் செல்லச் செல்ல நரிக்குப் பசி எடுக்க ஆரம்பித்தது. பசியின் வாட்டம் அதிகரிக்க, அதிகரிக்க நரி தனது தோழியான காக்கையை நினைத்தது. தினமும் இதே வேளைகளில் ஏதாவது இரையைக் கொண்டுவந்து குரல் கொடுக்குமே ...இன்று யார் வருவார்?

பசியின் கொடுமை தாளாது கிழட்டு நரி தவித்தது. அலைந்தது.

நரி பசியினுல் துடித்து இறுதியில் இறந்தே போய்விட்டது.

அசன் இறந்த உடலைக் காட்டுப் பறவைகள் சுவைத்து இரையாக்கிக் கொண்டிருந்தன.

"தீயவர் நட்பு என்றும்
தீமையே தரும்"

★

நிம்மதி கிடைத்தது!

[இரத்தினகுமார்]

நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த அழகான சிற்றூர், பேட்டை. அந்தப் பேட்டையிலேதான் பெயர் பெற்ற பணக்காரர்களிலே ஒருவரான செல்லையா வசித்துவந்தார். செல்லையாவுக்கு அறுபது வயதிருக்கும். இன்று பெரும் பணத்துடன் தனிமனிதராய் வாழ்ந்து வருகிறார்.

செல்லையாவுக்குஇருபத்துநான்காவது வயதிலேயே திருமணம் ஆகி விட்டது. மணமான மறு வருடம் மகன் பிறந்தான். செல்லையா தம்பதிகளைச் சிரிக்கவைத்தான் செல்வன் சீராளன்!

சீராளனுக்கு நான்கு வயது தாண்டிய பின் ஒரு நாள்...

பக்கத்துக் கிராமத்திலே உண்டான சுடலை மாடசாமி கோவில் திருவிழாவிற்குச் செல்லையாகுடும்பத்தினர் சென்றிருந்தனர். அங்கே, சாதாரண மனிதர்கள் மேல் சாமி வந்து, "சஞ்சனச்சான்... சனசனச்சான்" மேளத்தின் தாளத்திற்கேற்றுப்போல (சாமி) ஆடிக்கொண்டிருந்தனர்.

அப்போது இரவு பன்னிரண்டு மணி இருக்கும். இந்த நேரத்தில் தான், சாமிக்கு ஆடுகளைப் பலியிடுவார்கள்! ஆனால் இந்த அதிசயக் கோவிலில் 'பன்றி'களையும் பலியிடுவார்கள்!

இந்தப் பலியிடும் காட்சியைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டுநின்றார்கள் செல்லையாவின் குடும்பத்தினர்.

இந்தக் காட்சியைக் கண்ட செல்லையாவின் மகன் சீராளன், சிந்தனையின் சிகரம், தன் இதயத்திலே எழுந்தஎண்ணத்தைக் கேள்வியாய்க் கேட்டான் செல்லையாவிடம்; "ஐயோ பாவம்! இந்த ஆட்டுக் குட்டிகளை வெட்டுகிறார்களே! இவர்களெல்லாம் கெட்டவர்கள்தானப்பா?" என்று.

இந்தச் சொற்கள், ஆடிக்கொண்டிருந்த ஒருவரின் காதில் விழுந்து விட்டது. அவ்வளவுதான்! நினைக்கவே நெஞ்சம் பதறவைக்கும்அந்தச் செயல் நடந்துவிட்டது!

அந்த அறிவுக் கொழுந்தின்—சீராளனின்-சிரம்பிடித்து இழுத்தான் சாமியாடிக்கொண்டிருந்தவன்–விலை மதிக்கமுடியாத அந்த மாணிக்கத்தின், கழுத்தை அழுத்திப்பிடித்து நெறித்துக்கொண்டே, "அடே அயோக்கியப் பயலே! ஆண்டவனுக்கு ஆடுகள் பலியிடுவதை அக்கரமம் என்று சொல்ல உனக்கு எத்தனை துணிச்சலடா? உன்னை என்ன செய்கிறேன் என்று பார்!" என்று கூறியவாறே இன்னும் கொஞ்சம்பிடியை இறுக்கினான் அந்தக் கொலைக்கஞ்சாக் கொடியவன்.

அதை பார்த்த மக்களுக்கு ஒன்றும் செய்ய ஓடவில்லை! ஆண்டவன் செயலென்று அசையாது நின்று விட்டனர்! ஆனால் செல்லையாவின் மனைவி சின்னம்மாள்தான் ஓடோடிச் சென்று, சீராளனை தன் வசம் இழுத்துக்கொண்டு, சாமியாடிக் கொண்டிருந்தவனை அடித்துத் துரத் தள்ளினாள்.

இது நடந்த இரண்டு நாள் கழித்ததும் செல்வன் சீராளன் செத்து விட்டான்! ஆமாம்! சீராளனின் குரல்வளை நசுங்கிவிட்டது. அவனுக்கு மூச்சுவிடவே திண்டாட்டமாயிற்று. செல்லையா, நெல்லையிலே உள்ள எல்லா டாக்டர்களிடமும் சீராளனை எடுத்துச் சென்று காண்பித்தார். சோதனை செய்து பார்த்தவர்கள் அத்தனை பேரும் சோக முடிவையே சொன்னார்கள். அவர்கள் சொன்னதுபோலவேதான் சோகத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான் சீராளன்.

செல்லையாவின் மனைவி சின்னம்மாள் செத்துப்போன சீராளனின் பிணத்தை வைத்துக்கொண்டு, "அடப் பாழாய்ப்போகிற பகவானே! என் பாலகனைக் கொன்று விட்டார்களே!" என்று திட்டினாள்! சுவரில் முட்டினாள்! மோதினாள். ஆனாலும் சீராளன் வரவில்லை! எப்படி வருவான்?

மகனையே நினைத்து, நினைத்து அழுத சின்னம்மாள், அன்று இரவு செல்லையாவைத் தனியே தவிக்க விட்டு விட்டு, இந்த ஊரை விட்டே, உலகைவிட்டுத் தாவியோடிச்சென்று விட்டாள் செல்வ மகன் சீராளனிடம்!

சின்னம்மாள் இறந்ததைப் பற்றி அந்த ஊர் மக்கள் எல்லாரும், "மகனும் கடவுளைத் திட்டினான், தாயும் கடவுளைத் திட்டினாள். இரண்டு பேருக்கும் இறைவன் சரியான தண்டனை கொடுத்துவிட்டான்" என்று பேசிக்கொண்டார்கள். 'சின்னம்மாள் கடவுளைத் திட்டப் போய்த் தான் செத்துவிட்டாள்' என்று சொல்லத்தான் தெரிந்ததே தவிர, அவளுடைய உயிர், பிள்ளையின் பாசத்தால்தான் பிரிந்து சென்றது என்பது தெரியவில்லை அந்த ஊர் வம்பர்களுக்கு!

செல்லையாவின் மனைவி சின்னம்மாளும், செல்வன் சீராளனும் இறந்த பின்பு, இன்று அவருக்குத் துணை, புதிய பங்களாவும், பழைய சொத்தும்தான்.

செல்லையாவின் பங்களாவைச் சுற்றிலும் அருமையான அழகு படுத்தும் செடிகளும், காய்கறிக் கொடிகளும், வாழை மரங்களும், இன்னும் பிற செடி, கொடிகளும் வளர்ந்து இருந்தன. அவற்றைக் கண்ணிமை போல் காத்து வளர்ப்பவன் — கண்ணப்பன் — தோட்டக்காரன்.

கண்ணப்பன் இளைஞன், அழகன், அதோடு அடக்கமும் உடையவன். இதனால் இவனிடம் செல்லையாவுக்கு எல்லை இல்லா அன்புண்டு. அவனிடம் அடிக்கடி 'என் மகன்' உயிருடனிருந்தால் உன்னைப் போலவே இருப்பான்" என்று சொல்லி அவனைப் பரிவோடு பார்ப்பார்.

இத்தனைசொத்திருந்தும், இத்தனையும் காக்க எடுபிடி ஆட்களிருந்தும், மன நிம்மதி என்பது கொஞ்சம்கூட இல்லாமல் தவித்தார் செல்லையா.

"எனக்கு மன நிம்மதியே இல்லையே! ஏன்?" என்று தன் நண்பர்கள் சிலரிடம் கேட்டார். இதைக் கேட்டவர்களில் ஒருவர், "களக்காட்டிலே 'சச்சிதானந்த ஓதுவார்' என்று ஒருவர் இருக்கிறார். அவர் ஒவ்வொருவருடைய மன நிலையையும் நன்கறிந்து சொல்லி, மந்திரமும் ஓதி வருகிறார். அவரைப் போய்ப் பாருங்கள். உங்கள் மன நிம்மதிக்கு ஏதாவது மருந்து சொல்லுவார்" என்றார்.

மறுநாளே களக்காட்டிற்குச் சென்று ஓதுவாரைக் கண்டார் செல்லையா.

செல்லையாவிடம் எல்லா விபரங்களையும் விளக்கமாய்க் கேட்டுத் தெரிந்துகொண்ட ஓதுவார், "நீங்கள் பெரிய பணக்காரராகப் பெரிய பங்களாவில் பல பணியாட்களுடன் வாழ்ந்து வந்தாலும், மனதில் நிம்மதி இன்றித் தவிக்கவேண்டிய காரணம், வீட்டில் விளக்கேற்ற ஒரு மகாலட்சுமி தேவை. அதாவது நீங்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும்!" என்று ஒரு அணுகுண்டையே தூக்கிச் செல்லையாவின் காதில் போட்டார்.

மணம் என்ற எண்ணத்தைத் தன் மனதில் துளிகூட எண்ணாத செல்லையா உண்மையாகவே அசந்துபோய் விட்டார். "என்ன? நான் திருமணம் செய்துகொள்ள வேண்டுமா? இத்தனை வயதிற்குப் பிறகு எனக்கு யார் பெண் கொடுப்பார்கள்?" என்று கேட்டார் செல்லையா.

"என்ன இப்படிச் சொல்கிறீர்கள், உங்களிடம் இத்தனை பணமிருப்பதைக் கேள்விப்பட்டால், எத்தனையோ பேர் பெண் கொடுப்பார்களே! இந்தக் காலத்தில் வயதைவிட வசதி உண்டான இடமாய்ப் பார்த்துத்தானே பெண் கொடுக்கிறார்கள்!" என்று ஓதிவிட்டார் ஓதுவார்.

"இல்லை! அதற்கில்லை......இருந்தாலும்......!" என்று இழுத்தார்.

"உங்களுக்குச் சம்மதமானால் சொல்லுங்கள். நானே பெண் பார்த்து உங்கள் திருமணத்தை 'ஜாம் ஜாம்' என்று முடித்து வைக்கிறேன்" என்று சொல்லி ஓதிவிடுகிற வேலையிலிருந்து தரகன் வேலைக்கும் வந்தார் ஓதுவார்.

சில நாட்களில் அறுபது வயதுத் தாத்தா செல்லையாவுக்கும், பதினறு வயதுப் பருவ மங்கை பார்வதிக்கும் திருமணம் நடந்தது.

அறுபது வயதுடைய செல்லையா, இருபதுவயதுஇளைஞனாய் மாறியும்—திருமணம்நடந்தபின்னும்-நிம்மதியில்லாமல் தவித்தார். முன்பிருந்ததைவிட இப்பொழுதுதான் அதிகமாய் மன நிம்மதியின்றித் தவித்தார்.

திருமணமான நாளிலிருந்து இது நாள் வரை தன் மனைவியாகிய பார்வதியிடம், நெருங்கிப் பழகியதும் கிடையாது. தொட்டுப் பேசியதும் கிடையாது. திருமணமான நாளிலிருந்து இன்று வரை இருவருக்கும் தனித்தனி அறைதான் படுக்கை. இருவரும் பழகுவதும் தந்தையும், மகளுமபோல்தான்.

நாட்கள் நகன்றன! ஒருநாள் செல்லையா வெளியூர் போய்விட்டு வந்தார். வாசற்படிமீது அவர் காலெடுத்து வைக்கும்பொழுது, உள்ளே எழுந்த சிரிப்பொலி, சிதறியோடி வந்து அவர் செவியினுள் புகுந்தது.

திறந்து கிடந்த சன்னலின் திரைச் சீலையை ஒதுக்கிவிட்டு, உள்ளே உற்றுப் பார்த்தார். அங்கே......!

அங்கே கண்ட காட்சியை அவர் எதிர்ப்பார்க்கவில்லை. என்றாலும், அதனால் ஆச்சரியமோ, ஆத்திரமோ கொள்ளவில்லை. 'புதுப் பஞ்சில் பொருத்தி வைத்த நெருப்புப் பற்றிக் கொண்டது! இது பொருத்தமான காட்சிதான். நாம்தான் அணைந்துவிட்ட அடுப்பாயிற்றே!' என்று தன் மனதிற்குள் சொல்லிக்கொண்டார். வீட்டிற்குள் அவர்கண்டகாட்சி இதுதான்......வீட்டுக்காரி பார்வதியும், தோட்டக்காரன் கண்ணப்பனும், கொஞ்சிக் குலவிக் குதூகலத்துடனிருந்தார்கள்.

செல்லையா கதவைத் தட்டினர். கொஞ்ச நேரத்தில் பார்வதி கதவைத் திறந்தாள். உள்ளே சென்ற செல்லையா, "மகளே! பார்வதி என்னை மன்னித்துவிடம்மா! உனக்கு நான் துரோகம் செய்துவிட்டேன்" என்று சொல்லிப் பார்வதியின் கைகளிரண்டையும் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார். திருமணமான பின்பு அன்றுதான் அவளுடைய கையைத்தொட்டிருக்கிறார்.

"ஐயோ! என்ன இது?" பதறியபடிக் கேட்டாள் பார்வதி.

"பார்வதி! எனக்கு எல்லாம் தெரியும். நான் அனுபவிக்கவேண்டியவையெல்லாம் அனுபவித்துவிட்டேன். சாகப்போகிற நான் திருமணம் என்னும் விலங்கால் உன்னைக் கைது செய்து, என் வீட்டில் அடைத்து வைத்திருக்கிறேன். நீ இந்த உலகத்தில் அனுபவிக்க வேண்டியவை ஏராளம் இருக்கிறது. 'உலகத்தில் பணம்தான் பெரிது' என்று, பணத்திற்காக ஓதுவார் கூறிய பசப்பு வார்த்தையைக் கேட்டு உன் வாழ்வைப் பாழாக்கிவிட்டேன். நீ, பாலைவனத்தில் விடப்பட்ட பஞ்சவர்ணக் கிளியானாய்! பார்வதி! நெருப்பினால்தான் நீர் சூடாகிறது என்பதற்காக, அடுப்பிலே அரிசியை கொட்டினால், அது அன்னமாகி விடுவதில்லையே! அதுபோல்தான், என்னிடம் பணமிருக்கிறது என்பதற்காக, அடுப்பிலே போட்ட அரிசியைபோல உன்னை எனக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டார்கள். மகளே! இன்று முதல் உன் விருப்பப்படி எதை வேண்டுமானாலும், சுதந்தரமாய் அனுபவிக்கலாம்," என்று கூறிய செல்லையா,

"கண்ணப்பா! கட்டிலுக்கடியில் உன்னால் எவ்வளவுநேரம்தான் ஒளிந்துகொண்டிருக்கமுடியும்? வெளியே வாப்பா" என்றார் அன்பொழுக. பயந்து நடுங்கிக் கொண்டே வெளியே வந்தான் கண்ணப்பன். பார்வதியும் பயந்து நடுங்கினாள்.

"பயப்படாதீர்கள். நீங்கள் இரண்டுபேரும், இன்றுமுதல் என் இரண்டு கண்களையும் போன்றவர்கள். என்னால் உங்களுக்கு எந்த விதமான தீங்கும் வராது.

"கண்ணப்பா! பார்வதியைத் திருமணத்தன்று தொட்டுத் தாலிகட்டினேன் என்பதுதான் உண்மையே தவிர, அதற்குபின் இதுநாள்வரை அவளை நான் தொட்டதே கிடையாது. நீ கேட்கலாம், 'பூனையின் கையில் பாற் கிண்ணம் அகப்பட்டபின், அது அர்தபாலைப் பருகாமல் விட்டிருக்குமா?' என்று. ஆனால் பூனையோ, பாற் கிண்ணத்தைப் பார்க்கத்தான் செய்ததே தவிர, பாலைப் பருகவில்லை கண்ணப்பா! 'தாலிதான் பெண்களுக்கு வேலி' என்பார்கள். திருமணம் ஆகும் முன்பே கற்பை இழந்தவர்களும் உலகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்! ஆனால் பார்வதியோ திருமணமான பிறகும் கூடக் கற்பை இழக்கவில்லை! அவளுடைய கழுத்திலே இருக்கின்ற தாலி என்னைப் பொறுத்தவரையில் இதுநாள்வரை வேலியாகவே இருந்துவருகிறது. ஊரார் முன்னிலையில், ஆண்டவன் முன்னிலையில், அக்கினியின் முன்னிலையில், அய்யரின் முன்னிலையில்

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்.... } அலுவலகம் 15
இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

இவள் கழுத்தில் நான் கட்டியது தாலியல்ல! அது தூக்குக்கயிறு! காற்றிலே அகப்பட்ட இலவம் பஞ்சு போல் அந்தக் கயிற்றிலே தொங்கும் இவள் வாழ்வைக்கண்டு, உலகம் களிப்படைகிறதே தவிர, மனதிற்கு அமைதியை,மகிழ்ச்சிக்கு வழியைக் காட்டவில்லை.

கண்ணப்பா! இருண்டுகிடக்கும் இவள் வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமானால், இவள் கழுத்திலே தொங்கும் தூக்குக் கயிற்றை அறுத்துத் தூர எறிந்துவிட்டு, அந்தக் கழுத்திலே நீ கட்டும் மஞ்சள் கயிற்றிலே மின்னும் மாங்கல்யத்தினால் தான் முடியும்! இன்னும் உனக்கு விளக்கமாய்ச் சொல்லவேண்டுமானால், பார்வதி நீர்நிறைந்த குளத்தில் நீந்தவேண்டிய மீன். நானோ காய்ந்துபோன நிலம்–நீரற்றகுளம்! கடலில் கிடக்கவேண்டிய மீனைத் தூக்கித், திடலில்போட்டால் கிடக்குமா? நீருள்ள இடத்திற்குத்தானே துள்ளியோடும்! அது தேடி ஓடும் நீர், ஆற்று நீரோ, குளத்து நீரோ, கிணற்று நீரோ, எந்த நீராயிருந்தால் தான் என்ன? கண்ணப்பா! நீர் நிறைந்தகுளம் நீ! அதில் நீந்த வேண்டியமீன் பார்வதி! ஆகையினால்தான் சொல்லுகிறேன், இன்று முதல் நீதான் பார்வதியின் கணவன்! பார்வதிதான் உன் மனைவி! அதாவது இனிமேல் நீ என் மகன்! அவள் என் மருமகள்!'' என்று பாசமுடன் கூறிய செல்லையா, இரண்டு பேருடைய கைகளையும் ஒன்றாக இணைத்து வைத்தார்.

கண்ணப்பனும், பார்வதியும் செல்லையாவின் காலில்விழுந்து வணங்கிக்,கண்ணீரால்அவர் பாதங்களைக் கழுவினர். இரண்டுபேரையும் தூக்கி நிறுத்திய செல்லையா, "இருமனமும், ஒருமனதாகி இன்றுபோல என்றும் இன்பமுடன் வாழுங்கள்'' என்று மனதார வாழ்த்தினார்.

இதுநாள்வரை கிடைக்காமல் நிம்மதியைத்தேடி அழைத்த செல்லையாவுக்கு, இப்பொழுது நிம்மதி கிடைத்தது.

திராவிடநாடு ★ ★ ★ ★ ★

பொங்கல் மலர்

1963

★

சி. என். ஏ.

தீட்டும்

சிந்தனைச் சித்திரங்கள்
அறிவுலகக் கட்டுரைகள்

சிறு கதைகள்
ஓவியங்கள்
ஒப்பற்ற கருத்துக் குவியல்கள்

அத்தனையும்

எழிலும் அறிவும் மணக்கிறது!

இன்றே உங்கள் பிரதிகளுக்கு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

இந்த ஆண்டுப் பொங்கல் மலர், உங்கள் நூலகத்துக்கோர் அறிவுக் களஞ்சியம்.

★

விலை ரூ. 1–50

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.